REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 டிசம்பர் 19 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 300 | Tuesday 19, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-




**தமிழ் உத்தியோகத்தர்களை உள்ளடக்கி**

## நுவரெலியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்



நுவரெலியாவில் அடுத்த வருடம் ஜனவரியில் தமிழ் உத்தியோகத்தர்களை கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறக்கப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

புலம் பெயர் தொழிலாளர்களின் சிறுவர்களின் நலன்களுக்காக தனியான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதற்கமைவாக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் புலம் பெயர் தொழிலாளர்களின் மாணவர்கள் அதிகம் உள்ள பாடசாலையை தெரிவு செய்து அந்த பாடசாலைகளில் இவ்வாறான திட்டத்தை நடைமுறைப்படுத்த

06

## அரசுகள் மாறினாலும் மாற்றமடையாத வெளிநாட்டுக்கொள்கை அறிமுகமாக்கப்படும்

**தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்**



அரசாங்கங்கள் மாறினாலும் மாற்றமடையாத டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இதற்கான அடிப்படை பணிகள் அடுத்த வருடம் முதல் மேற்கொள்ளப்படும் எனவும், நிதி ஒதுக்கீடுகள் 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க

06

## வெளியுறவுக் கொள்கையில் சாதக மாற்றத்துக்கான நகர்வு

**தியத்தலாவ இராணுவ கல்லூரியில் ஜனாதிபதி**



நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் சாதகமான மாற்றத்திற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சுடன் மாத்திரம் இணைக்கப்பட்டுள்ள அமைதி காக்கும் பணிகள், இதன் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைக் கட்டமைப்பில் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தியத்தலாவ, இராணுவக் கல்வியற் கல்லூரியில் அண்மையில் (15) நடைபெற்ற வர்ணங்கள் வழங்கல் மற்றும் விடுகை அணிவகுப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

06

**ஹியூமன் இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி விவகாரம்**

# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்ரகுப்த கைது

**வாக்குமூலம் வழங்க CIDக்கு வந்தபோது அதிரடி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்ரகுப்த நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற நோய் எதிர்ப்பு தடுப்பூசியை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பிலேயே, இவர் கைதானதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. கைது செய்யப்பட்டுள்ள அவர் நேற்று மாளிகாகந்தை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். நேற்றைய தினம் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அவர் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

சர்ச்சைக்குரிய ஹியூமன் இம்யுனோக்ளோப்யுலின் தடுப்பூசி மருந்து இறக்குமதி தொடர்பில் கடந்த 30 ஆம் திகதி இரண்டாவது தடவையாகவும் அவர் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்தில் ஆஜராகி யிருந்தார். இதன் போது சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரிடம் சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதியப்பட்டுள்ளது.

அதேவேளை, தரமற்ற இம்யுனோக்ளோப்யுளின் மருந்தை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில், சுகாதார அமைச்சின் மருந்து

06



## பாடசாலைகளை அண்மித்த விற்பனை கூடங்கள் அகற்றப்படும்

**அடுத்த பாடசாலை தினத்திற்கு முன் நடவடிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கு அருகாமையில் மாணவர்களுக்கு பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சகல வியாபார கூடங்களையும், எதிர்வரும் பாடசாலை ஆரம்ப தினத்திற்கு முன்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து பாடசாலைகளின் அருகாமையில் 500 மீற்றர் எல்லைக்குள்

06

**தென்னிந்திய தொலைக்காட்சி ZEE தமிழில்**

## சிறுமி கில்மிஷா வரலாற்று சாதனையை பதிவு செய்தார்




தென்னிந்தியாவின் பிரபல தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற சரிகமப இசை நிகழ்ச்சியில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறுமி கில்மிஷா வெற்றி பெற்றுள்ளார். இதற்கான இறுதிச்சுற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்றபோதே சிறுமி கில்மிஷா வெற்றிவாகை சூடினார். இந்த இசை நிகழ்ச்சியில் இலங்கையில் இருந்து அசானி மற்றும் கில்மிஷா ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

06

## மாணவர்கள் மத்தியில் பரவும் வாய்ப்புற்று நோய்

**பெற்றோர்கள் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாய் புற்றுநோய் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் மற்றும் 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு இந்நோய் பரவுவதாக தெரிவித்துள்ள மருத்துவர்கள்

06

## குற்றச்செயல்கள், போதைப்பொருளை ஒழிக்க "யுக்திய" இராணுவ நடவடிக்கை

**ஒரு நாள் தேடுதலில் 2121 பேர் கைது**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவோரை கைது செய்யும் நடவடிக்கையில் 2121 நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் 2159 சுற்றி வளைப்புக்கள்

06



## 06 போதகர் ஜெரோமின் மனுவை நிராகரிக்குமாறு மனு தாக்கல்

**நாட்டில் டெங்கு நுளம்பு பெருக்கம்**

## நுளம்பு பரவலை தடுக்க ஐந்து நாள் வேலைத்திட்டம்



நாடளாவிய ரீதியில் ஐந்து தினங்களுக்கு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.நேற்று (18) முதல் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டடதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது. பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், நளின் ஆரியரத்ன

06

## ஜனாதிபதி ரணிலே அடுத்த ஜனாதிபதியும்

**நூறு இலட்சம் வாக்குகள் கிடைக்கும்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 100 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

06

## ஊடகவியலாளர் மருதமுனை காதர் காலமானார்



தினகரன் பத்திரிகையின் மருதமுனை தினகரன் நிருபராக நீண்ட காலம் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் பி. எம்.எம்.ஏ.காதர் நேற்று(18) தனது 66 ஆவது வயதில் காலமானார். மருதமுனையைச் சேர்ந்த

06



## 06 பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயம்

இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை




## 03 வருமான வரி செலுத்தாத வாகனங்களை தேடும் பணி

மோட்டார்வாகன திணைக்களம் நடவடிக்கை

## இந்திய முட்டைகள் 35 ரூபாவுக்கு விற்பனை

**ஒன்றரை கோடி முட்டைகள் இறக்குமதி**



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் இதுவரையில் ஆய்வுக்காக வழங்கப்படவில்லையென, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமலி கொத்தலாவல இதனை தெரிவித்துள்ளார். உள்ளூர் சந்தையில் முட்டை விலையை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ள நிலையில் இந்தியாவில் இருந்து ஒன்றரை கோடி

06

## சீரற்ற காலநிலை மாற்றமடையும் சாத்தியம்; வடக்கில் 9262 பேர் பாதிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை எதிர்வரும் 22ஆம் திகதிக்குப் பின்னர் மாற்றம் அடையுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் தற்போது நாடளாவிய ரீதியில் காணப்படும் அதிகரித்த மழைவீழ்ச்சி 22ஆம் திகதிக்குப் பின்னர் குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாகவும் அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தற்போதைய சீரற்ற காலநிலையால், வடமாகாணமே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு 9262 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

06



அநுராதபுரம் மாவட்டத்தில்;

# சிறுதானிய பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள அரசாங்கம் திட்டம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் எதிர் வரும் சிறுபோகத்தின்போது பாரிய அளவில் சிறுதானிய பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய திணைக்கள மாவட்ட பணிப்பாளர் தேனுவர தெரிவித்தார்.

மேற்படி திட்டம் அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக பயறு, உளுந்து மற்றும் குரக்கன், கௌப்பி நிலக்கடலை என்பவற்றினை செய்கை பண்ணுவதற்கு விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதுடன் அது சம்பந்தமான ஆலோசனைகளையும் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது.

எதிர்வரும் நாட்களின் பயனாளிகளை தெரிவு செய்யும் நடவடிக்கை மாவட்டத்திலுள்ள கமநல சேவைகள் திணைக்கள மத்திய நிலையங்களினால் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் தேவையான சலுகையும் வழங்கப்படவுள்ளது.

சென்ற காலங்களிலும் சிறுதானிய பயிர்ச்செய்கையின் மூலம் விவசாயிகள் பாரிய நன்மையடைந்துள்ளதாக விவசாய திணைக்கள அநுராதபுர மாவட்ட பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# வெலிகம மதுராபுர அஸ்ஸபாவில் பொன்விழா நிகழ்வுகள் இன்று

(வெலிகம தினகரன் நிருபர்)

மாறை / வெலிகம மதுராபுர அஸ்ஸபா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 50வது வருட பூர்த்தி விழா (பொன் விழா) மிக விமர்சையாக இன்று 19 ம் திகதி செவ்வாய்கிழமை முதல் 24ம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் ஹிப்லார் தலைமையில், பாடசாலை பழைய மாணவர் சங்க, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பிரதேசவாசிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் இவ்விழா இடம்பெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று மாபெரும் நடைபவனியொன்று வெலிகம நகரை வலம் வரவுள்ளதோடு நாளை 20ம் திகதி முதல் 24ம் திகதி வரை கண்காட்சி, களியாட்ட நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.




தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசனின் பிறந்த நாளை ஜனநாயக மக்கள் முன்னணியின் தென் கொழும்பு மற்றும் ஜனநாயக இளைஞர் இணையத்தின் ஏற்பாட்டில் தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலையத்தில் சிறப்பு விசேட பூசையுடன் நடைபெற்றபோது எடுத்த படம்.



மேல் மாகாணத்தின் களனி வலயத்திற்கு உட்பட்ட யடிஹேன அல் முஸ்தபா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் எம்.என்.எம். மிக்தாத் 2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இந்த மாணவனுக்கு பாடசாலை சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது.



குவைத் அரசின் ஆட்சியாளர் (அமீர் ) ஷெய்க் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபிரின் மறைவையிட்டு, கொழும்பில் உள்ள குவைத் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்பேட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று (18) தனது அனுதாபங்களைப் பதிவு செய்தபோது எடுத்த படம் அஷ்ரப் ஏ சமட்

போரா சமூகம் உட்பட்ட

# 08 பிரிவுகளில் காதி நீதவான் பதவிக்கு விண்ணப்பம்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நாட்டின் போரா சமூகம் உள்ளிட்ட எட்டு காதி நீதிமன்ற அதிகாரப் பிரிவுகளுக்கு காதி நீதவான் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஹொரணை, அக்குறணை, கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, யாழ்ப்பாணம், கிண்ணியா, மாஹோ காதி நீதிமன்ற பிரிவுகள் மற்றும் இலங்கை போரா சமூகத்துக்கு மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கடந்த எட்டாம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இம்மாதம் முப்பதாம் திகதி விண்ணப்ப முடிவு திகதியெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பங்கதெனிய வீடொன்றில் இளைஞன் சடலமாக மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

ஆராச்சிக்கட்டுவ பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை (16) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காதில் இரண்டு ஹேண்ட்ஸ் ஃப்ரீயை அணிந்துகொண்டு தூங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே குறித்த இளைஞன் இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிக்கட்டுவ பங்கதெனிய வெஹரகல பகுதியைச் சேர்ந்த விஜயசூரிய குணவர்தன மஹவடுகே ஹசித் சந்தருவன் பெரேரா என்ற 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

தந்தை மரக்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வருவதுடன், சடலமாக மீட்கப்பட்டவர் தனது உடன்பிறந்த சகோதரனுடன் இணைந்து வாகன விற்பனை செய்யும் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத் தினத்தன்று தாயும் தந்தையும் அதிகாலை மரக்கறி கொட்டகைக்கு சென்றுள்ள நிலையில், காலை 7.30 மணி ஆகியும் தம்பி எழுந்திருக்காததால், மற்றைய சகோதரன் அவர் உறங்கிக் கொண்டிருந்த அறையின் கதவைத் தட்டி எழுப்பியுள்ளார்.

எனினும், தூக்கிக் கொண்டிருந்த சகோதரனிடமிருந்து எந்த பதிலும் கிடைக்காததால், சந்தேகமடைந்த தான் சகோதரன் தூங்கிக்கொண்டிருந்த அறையின் பூட்டை உடைத்து உள்ளே சென்றதாக பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.


කෘෂිකර්ම අමාත්‍යාංශය
Ministry of Agriculture
கமத்தொழில் அமைச்சு

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

## Ministry of Agriculture
## Agriculture Division

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## Agriculture Sector Modernization Project
**IDA Credit No: 5873 LK**

# PROCUREMENT NOTICE

# Construction of Processing Center for the Jumbo Peanut Cluster in Killinochchi (Akkarayan)

**LK-MOA-PMU-365175-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture, and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Provincial Project Procurement Committee on behalf of the ASM Project, Ministry of Agriculture, now invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No | Description of Works | Estimated Cost (Excluding VAT) (Rs. Mn) | Contract Period | Required Grade | Bid Security Amount (Rs.) | Bid Security Validity up to | Non-Refundable Cash Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA- PMU-365175-CW-RFB | Construction of Processing Center for the Jumbo Peanut Cluster in Killinochchi (Akkarayan) | 29.1 | 4 months | C5 or Above (Buildings) | 436,500.00 | 22nd April 2024 | 5,000.00 |

3. Bidders are allowed to quote for the above work with Bid Security and Bid validity date as mentioned in the Bid document. One bidder is allowed to quote only for one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA)
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, No: 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Northern Province (T.P: 021 221 6358) and inspect the bidding documents at the same place on any working day from 18th December 2023 to 8th January 2024 between 09:00 hrs and 14:30 hrs.
7. Pre-Bid meeting will be held on **2nd January 2024** at 10.00 a.m. at Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project, No: 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Sri Lanka. A site visit to the proposed project site will be arranged after the pre-bid meeting.
8. Bids shall be valid up to 25th March 2024.
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project, No: 340, Point Pedro Road, Jaffna, Sri Lanka from 18th December 2023 to 8th January 2024 between 09:00 hrs and 14:30 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the above Table, within the below mentioned period. The method of payment should be by cash.
11. Closing date of the bid is **8th January 2024, at 14.30 hrs.**
12. Bids must be delivered to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project No. 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Sri Lanka at or before 14:30 hrs on the bid closing date as mentioned above.
13. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened immediately after bid closing in the presence of the bidders' representatives who choose to attend in person at the above mentioned address.
14. Complete bids should be separately forwarded in two copies as original and duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as 'original' and 'duplicate' respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee,**
**Provincial Deputy Project Director,**
**Northern Province,**
**Agriculture Sector Modernization Project,**
**No. 340, Point Pedro Road, Anaipanthi,**
**Jaffna, Sri Lanka.**

18th December 2023



## இலங்கை துறைமுக அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வரும் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறைக்கு (NCB) அமைய இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் கனிஷ்ட பெறுகைக் குழு (mPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| குறிப்பு அடையாள இல. | பெறுகை பெயர் | விலைமனுப் பிணை தொகை (இ.ரூபா) | வெட் உட்பட ஆவணக் கட்டணம் (இ.ரூபா) | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/PT/2023/MA/24/16-01 | TENDER FOR REPAIRING OF 02 NOS OF PROPELLER UNITS OF THE LAUNCH: PILOT 16 | 50,000/= | 2,000/= | 2024.01.11 அன்று 14.00 மணி |

1. ரூபா 5.0 (ஐந்து) மில்லியனுக்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு 1987 இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் என்பதை விலைமனுதாரர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. அதன்படி ஒப்பந்தக் காலப்பகுதி முழுவதும் இந்த சட்டத்தை மேற்கூறப்பட்ட பெறுகையுடன் தொடர்புடைய அனைத்து தரப்புகளும் கண்டிப்பாக பின்பற்றுவதற்கு வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் உந்தி (propeller) பழுதுபார்த்தல் மற்றும் கப்பல்கள் சோதனை தொழில்துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் jagath_kumara@slpa.lk என்ற மின்னஞ்சல்/ 0094 11 2342537 என்ற தொலைபேசி/ 0094 11 2482330 என்ற தொலைபேசி இலக்கத்தில் இலங்கை, கொழும்பு 01, லெய்டன் பெஸ்டியன் வீதி, 45, இலங்கை துறைமுக அதிகாரசபை, கடல்சார் பொறியியல் பிரிவு, தலைமை பொறியியலாளர் (கடல்சார்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.01.10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அதே முகவரியில் விலைமனு ஆவணத்தை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
4. 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.01.10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 10.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 2,000 இ.ரூபாவை (வெட் உட்பட) செலுத்தி மேலுள்ள முகவரியில் தலைமை பொறியியலாளருக்கு (கடல்சார்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். ஆவணக் கட்டணத்திற்கான கொடுப்பனவு ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. விலைமனுப் பிணையுடனான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.01.11 ஆம் திகதி 14.00 மணிக்கு விலைமனு மூடப்படும் திகதி தாமதிக்காது தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை துறைமுக அதிகாரசபை, 45, லெய்டன் பெஸ்டியன் வீதி, கொழும்பு 01, இலங்கை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது இலங்கை, கொழும்பு 02, லெய்டன் பெஸ்டியன் வீதி, இல. 45, இலங்கை தறைமுக அதிகாரசபை, கொழும்பு துறைமுக ஆணையாளர் கட்டிடம், தரைத் தளத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் விலைமனுக்களை இடலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழுள்ள முகவரியின் மாநாட்டு அறையில் விலைமனு திறக்கும் சந்தர்ப்பத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விலைமனுதாரரினால் தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன் துறைமுக வளவுக்கு வருகைதந்து உந்திகளை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைமை பொறியியலாளர் (கடல்சார்)**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பெஸ்டியன் வீதி, கொழும்பு - 01**

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 19 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் - | 04.54 |
| லுஹர் - | 12.09 |
| அஸர் - | 03.30 |
| மஃரிப் - | 06.00 |
| இஷா - | 07.15 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் மார்கழி 04

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# பெசில் ராஜபக்ச மீண்டும் அமெரிக்கா பயணம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

முன்னாள் நிதியமைச்சரும் பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளருமான பெசில் ராஜ பக்ச நேற்று மீண்டும் அமெரிக்கா நோக்கி பயணமானதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அவர் துபாய் சென்று, அங்கிருந்து அமெரிக்கா வின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திற்கு விமானத்தில் பயணித்துள்ளதாக வும் அந்த வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ச கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து அண் மையில் விலகியிருந்தார்.

அந்த வகையில் அமெரிக்காவுக்கு பயணமாகியுள்ள பெசில் ராஜபக்ச, சுமார் ஒன்றரை மாத காலம் அங்கு தங்கியிருப்பார் என அரசியல் வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

# வருமான வரி செலுத்தாத வாகனங்களை தேடும் பணி

## மோட்டார் வாகன திணைக்களம் நடவடிக்கை




வருமான அனுமதிப்பத்திரமில்லாத வாகனங்கள் பற்றிய தகவல்களை திரட்ட, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐந்து வருடங்களுக்கு அதிக காலம் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பில், மாகாண சபைகளிடமிருந்து தகவல்கள் பெறப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க மேற்கொண்டுள்ளார்.

இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகன உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, பதிவு செய்யப்பட்டு பல வருடங்களாக பயன்படுத்தப்படாத சுமார் 23 இலட்சம் வாகனங்களை, தடை செய்யவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வருவாய் உரிமம் புதுப்பிக்கப் படாத அல்லது மாற்றப்படாத வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சபாநாயகர் மஹிந் தயாப்பா அபேவர்தன தலைமையிலான எம்பிக்கள் நேற்று (18) மகாத்மா காந்தியின் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# பாடசாலை மாணவர்களுக்கு காலணி வவுச்சர்கள் விநியோகம்



**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள 47 பாடசாலைகளின் மாணவர்களுக்கு காலணி வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (18) அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

06

# அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பேரவை உறுப்பினரும் மூத்த ஊடகருமான திருமதி சுமதி பாலஸ்ரீதரன் தலைமையில், அறிவோர் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

நாளை (20) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இது நடைபெறும். நிகழ்ச்சியில், கதை சொல்லும் கலை வடிவங்கள் அளிக்கை: பக்திப் பாடல், சிறுவர் பாடல், நாட்டார் பாடல்களை, கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன் வழங்குவார்.


**வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வெளிச்செல்லல் நடைபாதையில் புதிய வர்த்தக முயற்சியொன்றை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**Tender No. 101/T/2023**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வெளிச்செல்லல் நடைபாதையில் புதிய வர்த்தக முயற்சியொன்றை செயற்படுத்துவதற்காக பதிவு பெற்ற கம்பனிகள், நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் மூன்று (03) கருமபீடங்கள் வெளிச்செல்லல் நடைபாதையில் விலைமனுக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் ஒன்று அல்லது அனைத்து கருமபீடங்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், குறிப்பிட்டதொரு விலைமனுதாரர் ஒரு கருமபீடத்தை மாத்திரமே செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவார்/ ஒப்பந்தம் வழங்கப்படும். தேயிலை, இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம், இனிப்புப் பண்டங்கள், அழகுசாதனங்கள், புகையிலை மற்றும் வாசனை திரவியங்கள் நீங்கலானவைகளின் செயற்பாடுகளுக்காக வெளிச்செல்லல் நடைபாதையில் புதிய வர்த்தக / முயற்சிகள் தற்போது இல்லை.

பிரயோகப்படுத்தப்படவுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 2024 ஜனவரி 16ஆம் திகதி வரையும் வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடி, 31 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவு அலுவலகத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் கோரிக்கை கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். ஒன்லைன் பணக்கொடுப்பனவு ஊடாக மீளளிக்கப்படாத கட்டணமான 7,500 ரூபாவை செலுத்துவதன் மூலம், www.airport.lk என்ற வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகளின் இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் வர்த்தக மற்றும் சொத்துக்கள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்படும் விலைமனுக்கோரல் படிவங்களிலேயே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனுப் பிணையானது 400,000 ரூபா ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவு அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான உரிமமுள்ள விஷேடத்துவ வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

2024 ஜனவரி 09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் அதன் பின்னர் அமைவிடத்திற்கான விஜயமொன்றும் நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்ட உரைக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், கேள்விச் சபை இல. 1 என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகம், வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஜனவரி 17ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர், வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்தில் பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்களை மூடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர் பெறப்படும் எந்தவொரு விலைமனுவும் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை 011-2264005, 011-2264000 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது head.cp@airport.lk என்ற மின்னஞ்சல் வழியாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 31 ஆம் இலக்க அறையின் வர்த்தக மற்றும் சொத்துக்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**



**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

## பொது அறிவித்தல்

### டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க் (பிரைவட்) லிமிடடின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க இலங்கையில் இணைய வலையமைப்புச் சேவையை வழங்குவதற்கு தொலைத்தொடர்பு முறைமையொன்றைச் செயற்படுத்துவதற்குச் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க் (பிரைவட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க மேலொமொரு ஐந்து வருட காலப் பகுதிக்காக **டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க் (பிரைவட்) லிமிடடிற்கு** வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பதை சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க் (பிரைவட்) லிமிடடிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2024.01.17** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்ற முகவரிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான www.trc.gov.lk. இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி : 011 – 2689345 பெக்ஸ் : 011 – 2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk**

SELACINE



**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

## பொது அறிவித்தல்

### பிரிசெட் லங்கா (பிரைவட்) லிமிடடிற்குச் அனுமதிப்பத்திரம் வழங்கல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க இணைய **டெலிபோட் சேவைகளை** வழங்குவதற்கு தொலைத்தொடர்பு முறைமையொன்றை செயற்படுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **பிரிசெட் லங்கா (பிரைவட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க ஐந்து வருட காலப் பகுதிக்காக **பிரிசெட் லங்கா (பிரைவட்) லிமிடடிற்கு வழங்கப்பட்டுள்ள** அனுமதிப்பத்திரத்தைப் வழங்குவதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது ஆணைக்குழுவச் சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பிரிசெட் லங்கா (பிரைவட்) லிமிடடிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2024.01.17** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்று முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணைய தளமான www.trc.gov.lk. இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி : 011 – 2689345 பெக்ஸ் : 011 – 2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk**

SELACINE

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 04ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 04

### குறள் தரும் சிந்தனை



ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை

*இரந்து பொருள் பெறுபவர் இல்லாத நிலையில், பொருள் கொடுத்துப் புகழ் பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமற் போய்விடும்.*

## சீரற்ற காலநிலை நீடிப்பதால் மிகுந்த அவதானம் அவசியம்!

நாட்டில் கடந்த சில மாதங்களாக சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இக்கால நிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இக்காலநிலை காரணமாக சில வாரங்களுக்கு முன்னர் மாத்தறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் கடும் வெள்ளநிலைமை ஏற்பட்டது. அதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக சில குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததோடு சொத்துக்களுக்கும் பாதிப்படைந்தன. அத்தோடு இம்மாவட்டத்தின் பல பிரதேசங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலயங்களில் தங்கி இருந்தன.

இந்த வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புக்களில் இருந்து மக்கள் மீட்சி பெறுவதற்கிடையில் மலையகத்தின் சில பிரதேசங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டன. அதற்கு அதிக மழைவீழ்ச்சியே காரணமென குறிப்பிட்ட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கும் அப்புறப்படுத்தியது.

மழைவீழ்ச்சி அடிக்கடி கிடைக்கப்பெற்றுவரும் சூழலில் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள நீர்த்தேக்கங்கள் சிலவற்றின் வான்கதவுகள் திறக்கப்பட்டதன் விளைவாகவும் சில குளங்கள் நிரம்பி வழிவதன் காரணமாகவும் புத்தளம் மாவட்டத்தின் சில பிரதேசங்களது தாழ் நிலங்களில் ஏற்கனவே வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகவும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த வார இறுதியில் வடபகுதியில் பெய்த கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பிரதேசங்களும் நீரில் மூழ்கியுள்ளன. சில இடங்களில் இரண்டு மூன்று அடிகள் உயரத்திற்கு வெள்ளம் பாய்ந்தது. இதனால் இம்மாவட்டத்தில் மாத்திரம் 2500 க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மாத்திரமல்லாமல் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இம்மழை வீழ்ச்சியினால் பல பிரதேசங்களிலும் வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு குளங்களும் நிரம்பி வழியக்கூடியனவாக உள்ளன. சில குளங்கள் உடைப்பெடுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளன.

இச்சீரற்ற காலநிலையினால் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு உள்ளாகும் நிலைக்கு நாடு முகம்கொடுத்துள்ளது. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு முன்னெச்சரிக்கைகள் அடிக்கடி விடுக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு வெள்ள அச்சுறுத்தல் மிக்க தாழ்நிலப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெச்சரிக்கைகளை விடுத்திருக்கிறது.

இச்சீரற்ற காலநிலையினால் மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளன. வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக வீதிப் போக்குவரத்துகளும் அடிக்கடி பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்தோடு கடும் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் கடும் காற்று வீசும் போது வீதிகளுக்கு அருகிலுள்ள உயர்ந்த மரங்களின் கிளைகள் முறிந்து விழும் சந்தர்ப்பங்கள் மாத்திரமல்லாமல் மரங்களே சரிந்து விழக்கக்கூடிய நிலைமையும் நிலவவே செய்கின்றது. அத்தோடு கடும் மழை பெய்யும் போது இடி மின்னல் தாக்கங்களுக்கான அச்சுறுத்தலும் உள்ளது.

இக்காலநிலையினால் பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான அவசர நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் அந்தந்த மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு நிதியொதுக்கீடுகளும் மெற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனால் சீரற்ற காலநிலையினால் மண்சரிவு மற்றும் வெள்ள நிலை ஏற்படுமாயின் தாமதமின்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பதோடு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரவும் தாமதமடையக்கூடாது.

இலங்கை வருடா வருடம் தேவையான அளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறக்கூடிய இடத்தில் புவியில் அமைந்துள்ளது. அதற்கேற்ப நாட்டுக்கு வழமை போன்று மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுகிறது. ஆனால் மக்கள் முகம்கொடுக்கும் அசௌகரியங்கள் முன்பைவிடவும் தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. அதனால் தான் சீரற்ற காலநிலையின் தாக்கங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மைக் காலமாக சிறிதளவு மழை பெய்தாலும் வெள்ளநிலை ஏற்பட்டு விடுகிறது. மண்சரிவு அச்சுறுத்தல் தோற்றம் பெறுகிறது. ஆனால் இற்றைக்கு பத்து இருபது வருடங்களுக்கு முன்னர் அவ்வாறான நிலைமை நாட்டில் மிகவும் அரிதாகவே ஏற்பட்டது. இதற்கு மழைநீர் வழிந்தோடக்கூடிய தாழ்நிலங்களும் சதுப்பு நிலங்களும் நிரப்பப்பட்டு கட்டிடங்களும் மதில்களும் எழுப்பபட்டுள்ளமையும், மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் நிலம் பயன்படுத்தப்படுவதில் நிலவும் தவறுகளும்தான் காரணங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பாடுகளை அமைத்துக்கொள்ளும் போது சீரற்ற காலநிலை ஒரு போதும் பாதிப்பாக அமையாது. அதுவே துறைசார் நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஊடகத்துறை ஊடாக இனநல்லுறவை கட்டியெழுப்ப அயராது பாடுபட்டவர் மருதமுனை பி.எம்.எம்.ஏ.காதர்

மருதமுனையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் பி. எம்.எம்.ஏ.காதர் அவர்கள் நேற்று(18) தனது 66 ஆவது வயதில் காலமானார். 1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி பிறந்த பி.எம்.எம்.ஏ.காதர், எதிர்வரும் 27ஆம் திகதி தனது 67 வது வயதை நிறைவு செய்ய இருந்த தருணத்தில் இவ்வுலகை விட்டு விடைபெற்றுச் சென்றார்.

35 ஆண்டுகள் ஊடகத்துறையில் பரிணமித்துக் கொண்டிருந்த பி.எம். எம். ஏ. காதர் தினகரன் பத்திரிகையின் பிரதேச ஊடகவியலாளராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார். இலங்கையின் தேசிய பத்திரிகைகள் மற்றும் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் பலவற்றில் அவர் தனது எழுத்துப்பணியை மேற்கொண்டுள்ளார்.

இலத்திரனியல் ஊடகங்கள் பலவற்றிலும் அவர் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார். சமூக ஊடகங்கள் வாயிலாக தான் வாழ்ந்த மருதமுனை பிரதேசத்தினதும் ஏனைய பிரதேசங்களினதும் வாழ்வியல் அம்சங்களை உலகறிய செய்த ஒரு மூத்த ஊடகவியலாளராக அவர் திகழ்கின்றார். ஊடகத்துறையில் பல்வேறு விருதுகளை பெற்றுக் கொண்ட இவர், சிறந்த ஊடகவியலாளருக்கான தேசிய விருதுகளையும் வென்றுள்ளார்.



2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கலாபூசண விருது வழங்கும் விழாவில் ஊடகத்துறைக்கான கலாபூசணம் விருதினை பெற்றுக் கொண்டார். 2010 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியில் சிறந்த பத்திரிகையாளருக்கான சுப்பிரமணிய செட்டியார் தேசிய விருதை வென்ற முதல் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

2012 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியில் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான தேசிய விருதையும் இவர் வென்றார். 2018 ஆம் ஆண்டின் ஊடகத்துறைக்கான கிழக்கு மாகாண வித்தகர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இலங்கை சமாதான கற்கைகள் நிலையத்தினால் 2015 ஆம் ஆண்டுக்கான சமாதான தூதுவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஊடகத்துறையின் மூலம் இனநல்லுறவுக்கும் சமாதானத்துக்கும் இவர் ஆற்றிய பெரும் பங்களிப்புக்காக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



## மூத்த ஊடகவியலாளரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

மருதமுனை பிரதேசத்தின் பல்வேறு சிவில் சமூக அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் ஊடாகவும் பல விருதுகள் வழங்கி இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். மருதமுனை புதுப்புனைவு இலக்கிய வட்டம் 2019 ஆம் ஆண்டு இவருக்கு விழா ஒன்று நடத்தியதோடு 'தீராமை' எனும் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த மர்ஹூம் பத்து முஹம்மது ராவுத்தர் பீர்முகம்மது மற்றும் மருதமுனையைச் சேர்ந்த இஸ்மாலெப்பை ஆமினா உம்மா தம்பதியின் இரண்டாவது புதல்வரான இவர் மருதமுனை 01 அக்பர் வீதியில் தனது மகளின் இல்லத்தில் வாழ்ந்து வந்த நிலையில் காலமானார்க. இவர் எம்.எல்.ஹவ்லத் அவர்களின் கணவரும்,ஹரீஸா, சாகிறா. றாயிஷா,சீமா,சீபா,சஜீத் அஹமட் ஆகியோரின் தந்தையுமாவார். இவரது ஜனாஸா மருதமுனை அக்பர் ஜும்ஆ பள்ளி வாசலில் தொழுகை நடத்தப்பட்ட பின்னர் அக்பர் மையவாடியில் நேற்று இரவு (18) நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

பல இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பாளராக வாழ்ந்து மறைந்தவர் காதர் ஆவார். சமூக செயற்பாட்டாளரான ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் அவர்களின் இழப்பு மருதமுனை மண்ணிற்கு பேரிழப்பாகும்.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(மருமகன், மருதமுனை)*
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

### 'Zee Tamil' தொலைக்காட்சி சரிகமப இசைநிகழ்ச்சி;

# தமிழ்நாடு சென்று முதலிடத்தை வென்றெடுத்த யாழ் சிறுமி கில்மிஷா

தென்னிந்தியாவின் பிரபல தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற சரிகமப இசைநிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுமி கில்மிஷா உதயசீலன் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் (17) நடைபெற்ற இறுதிச்சுற்றில் கில்மிஷா வெற்றிவாகை சூடியுள்ளார். குறித்த இசைநிகழ்ச்சியில் இலங்கையில் இருந்து அசானி மற்றும் கில்மிஷா ஆகிய இருவரும் கலந்து கொண்டார்கள். எனினும் இறுதிச் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை அசானி தவற விட்டிருந்தார். எனினும் மலையக மக்களின் அடையாளமாக அவர் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கில்மிஷா வெற்றிவாகை சூடியமைக்காக பல்வேறு பிரபலங்களும் தமது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். கில்மிஷா யாழ் அரியாலையைச் சேர்ந்தவர்.

'Zee Tamil' தொலைக்காட்சியில் சரிகமப இசைநிகழ்ச்சி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகி வருகின்றது. சரிகமப லிட்டில் சேம்ப்ஸ் சீசன் 3 நிகழ்ச்சி கடந்த ஜூன் மாதம் 28 போட்டியாளர்களுடன் தொடங்கியது. இந்த நிகழ்ச்சியை அர்ச்சனா தொகுத்து வழங்க, ஸ்ரீனிவாஸ், விஜய் பிரகாஷ், சைந்தவி மற்றும் அபிராமி ஆகியோர் நடுவர்களாக பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி ஜூன் மாதம் 28 போட்டியாளர்களுடன் தொடங்கியது. இந்நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பிரம்மாண்டாக நடைபெற்றது. இதில், ரிக்ஷிதா, கில்மிஷா,





சஞ்சனா, ருத்ரேஷ், நிஷாந்த கவின் மற்றும் கனிஷ்கர் ஆகியோர் இறுதிப் போட்டுக்கு தெரிவானார்கள். இதில் தன் வசீகரக் குரலால் அனைவரையும் ஈர்த்து வந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறுமி கில்மிஷா வெற்றி பெற்று டைட்டிலை வென்றார். அவருக்கு ஏராளமான ரசிகர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இது சிறுவர்களுக்கான பாடல் போட்டியாகும்.

இறுதிச்சுற்றில் முதலாவது இடத்தினை கில்மிஷாவும், இரண்டாவது இடத்தினை சஞ்சனாவும், மூன்றாவது இடத்தினை ரிக்ஷிதாவும் பிடித்திருந்தனர். பரபரப்பான தருணத்தில் வெற்றியாளராக இசையமைப்பாளர் யுவன் சங்கராஜாவினால் கில்மிஷா அறிவிக்கப்பட்டார். மேலும், வெற்றிபெற்ற கில்மிஷாவுக்கு பத்து இலட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது.

# இந்திய நாடாளுமன்றத்தின் வரலாற்றில் ஒரேநாளில் 78 எம்.பிக்கள் இடைநீக்கம்!

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று ஒரே நாளில் 78 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் ஒரே நாளில் இத்தனை எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நுழைந்த சிலர், புகை வரும் குப்பிகளை வீசி ரகளை செய்தனர். அதேபோல இன்னும் சிலர் நாடாளுமன்றத்திற்கு வெளியே ரகளை செய்தனர். இது தொடர்பான வீடியோக்களும் இணையத்தில் பரவின.

இந்திய நாடாளுமன்றத்தில் நடந்த மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக இது பார்க்கப்படுகிறது. இந்த விவகாரத்தில் இதுவரை 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிசார் இது தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். அவர்கள் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே தற்போது நாடாளுமன்றம் நடைபெற்று வரும் நிலையில், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடந்த பாதுகாப்பு மீறல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவையில் விளக்கமளிக்க வேண்டும் என்பதை எதிர்க்கட்சி எம்.பிக்கள் வலியுறுத்தினர். அவர்களை அமைதி காக்குமாறு சபாநாயகர் பல முறை சொன்ன போதிலும், அவர்கள் அமித் ஷா விளக்கமளிக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தினர்.

இதையடுத்து 33 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் லோக்சபாவில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய குளிர்கால கூட்டத்தொடர் முழுக்க அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் கடந்த வாரம் 13 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில், இப்போது மேலும் 35 எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அதேபோல நாடாளுமன்ற நடவடிக்கைகளைச் சீர்குலைத்தாக கூறி ராஜ்யசபாவிலும் 45 எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.



மேலும் 11 எம்.பி.க்கள் சிறப்புரிமைக் குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை இடைநீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நேற்று ஒரே நாளில் லோக்சபாவில் 33 எம்பிக்கள், ராஜ்யசபாவில் 45 எம்.பிக்கள் என மொத்தம் 78 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# குளிர்கால மெஜிக் கொண்டாட்டத்தை ஆரம்பித்த Excel world's SNOW WORLD

இலங்கையில் உறைபனிக்கால பண்டிகை விளையாட்டுகளுடன் பனித்துளிகள் நிறைந்த வேடிக்கையை வழங்கும் பிரத்தியேகமான நிகழ்வு இடமாக ஸ்னோ வேர்ல்ட் திகழ்கின்றது.

எக்செல் வேர்ல்டின் ஸ்னோ வேர்ல்டின் தொடக்கமானது முதன்மை அனுசணையாளரான பெ;பசி கம்பனிரூபவ் மற்றும் முக்கிய ஊடக அனுசரணையாளரான Voice of Asia Network என்பன முன்னணி ஊடகப் பிரமுகர்கள் மற்றும் Excel Restaurants மற்றும் Browns Group அதிகாரிகளுடன் இணைந்து டிசம்பர் 7 அன்று மாலைப்பொழுதில் Excel World&R+39;s Snow World இல் நடைபெற்ற பிரத்தியேக விசேட ஊடக சந்திப்புடன் ஆரம்பமானது.

பனிப்பிரதேச கலைமான்களால் சூழப்பட்ட நிஜ அளவிலான நத்தார் பாப்பாவின் பனிச் சறுக்கு வாகனம் அலங்கரிக்கப்பட்ட விண்மீன்கள் நிறைந்த பின்னணியில் புதியதோர் மெய்சிலிர்க்க வைக்கும் வட துருவப்பகுதி அனுபவத்தை ஸ்னோ வேர்ல்ட் இவ்வாண்டு அறிமுகப்படுத்துகிறது. மாடத்தின் முன்பகுதியில் உயர்ந்து நிற்கும் பனிமனிதர்களில் வெளிச்சத்தைத் தெறிக்கும் ஸ்பொட்லைட் விளக்குள் இம்மாயாஜால சாகசத்தை கண்டுகளிக்க அனைவரையும் அழைக்கிறது. ஒரு மாத கால கொண்டாட்டத்திற்கு இடமளிக் ஸ்னோ வேர்ல்ட் உறுதி பூண்டுள்ளதுடன் டிசம்பர் 8 தொடக்கம் 31 வரை மாலை 5 முதல் 10 மணி வரை பொதுமக்களுக்காகத் திறந்திருக்கும். எக்செல் வேர்ல்ட்ரூபவ் டிசம்பர் 15 தொடக்கம் பண்டிகை களியாட்டத்தை நடத்திரூபவ் ஒவ்வொருவருக்கும் பரவசமான விளையாட்டுக்களையும் பொழுதுபோக்கையும் வழங்கும்.

ஒவ்வொரு பார்வையாளரையும் மாயாஜால சாம்ராஜ்யத்திற்குள் கொண்டு சென்று வ ட து ரு வ த் தின் களிப்பை உணரச் செய்வதே எமது இலக்கு. ஹெம்பர்ஸ் மற்றும் நத்தார் பொருட்கள் ரூபவ் பண்டிகைக் கால விருந்துகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றுக்கான இடவசதி வழங்குதல் போன்றவற்றுடன் பண்டிகை கொண்டாட்டங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இவ்வாண்டு எக்செல் வேர்ல்ட் தயாராக உள்ளது என்று Excel Restaurants Pvt. Ltd நிறுவனத்தின்

பிரதம நிறைவேற்று அலுவலர்அதிகாரி புலிந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.



முழுக்குடும்பத்திற்குமான கொழும்பின் மிகவும் பிரபலமான பொழுதுபோக்கு பூங்காவான எக்செல் வேர்ல்ட்ரூபவ் பிரவுன்ஸ் குழுமத்திற்குச் சொந்தமான கம்பனியான Excel Restaurants Ltd நிறுவனத்திற்கு உரித்தானதும் அதன் மூலம் முகாமை செய்யப்படுவதுமாகும். கொழும்பிலேயே ஒப்பற்ற குளிர்கால அனுபவத்தைப் பெற்று விடுமுறை நாட்களைக் கொண்டாடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.










# நம்பிக்கை - மகிழ்ச்சி தரும்

## இயேசு பாலனின் பிறப்பு

உலகெங்கும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறப்பின் பண்டிகையாம் நத்தார் பெருவிழாவை கொண்டாடுவதற்கு ஆயத்தங்கள் இடம் பெற்று வரும் காலம் இது.

இதோ உலகுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் செய்தி என்று நம் ஆண்டவர் இயேசு பிறப்பின் செய்தியை தேவதூதன் பூமிக்கு அறிவித்தது முதல் இன்று வரை அந்த மகிழ்ச்சி அதே விதமாக தொடர்கிறது.

இந்த விழா ஆண்டுக்கு ஒருமுறை தானே வருகிறது. இரண்டு, மூன்று முறை வரக் கூடாதா?' என்ற ஏக்கம் எதிரொலிக்கும் பிரபலமான ஆங்கில வாசகம் ஒன்றுள்ளது. 'கிறிஸ்மஸ் கம்ஸ், பட் வன்ஸ் எ இயர்'. ஆம்! கிறிஸ்துமஸ் பண்டிகை ஆண்டில் ஒருமுறைதான் வருகிறது

உலகெங்கும் உள்ள 242 கோடிக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, மற்ற சமயங்களைச் சார்ந்த மக்களும் இணைந்து மகிழ்ந்து கொண்டாடும் பெருவிழா கிறிஸ்மஸ பெருவிழா

மேலை நாடுகளில் வாழ்ந்து வருவோர் தொடர்பில் நாம் பார்த்தோமானால்இந்த விழாக் காலத்தின்போது, அங்கிருந்தவர்களுக்கு இந்த விழாவைச் சார்ந்த கொண்டாட்டங்களும், அவை உருவாக்கும் களிப்பும் பேரானந்தமும் தெரிந்திருக்கும்.

### புன்னகையில் கண்ணீர்

இந்த விழாக் காலத்தில் எங்கும் ஒலிக்கும் கிறிஸ்மஸ் பாடல்களோடு துயர கீதங்களும் சேர்ந்தே ஒலிக்கும். குடும்பத்தில் ஒருவரை அல்லது நெருங்கிய நண்பரைப் பறிகொடுத்தோரின்புன்னகையில்கண்ணீர்ஒளிந்திருக்கும்.

கிறிஸ்மஸ் விழாவின்போது குடும்பத்தினருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் பரிசு தரும் பழக்கம் இருக்கிறது. நோய்த்தொற்றைத் தடுப்பதற்காக 'விலகியிருங்கள். ஆறடி தூரமாவது தள்ளி நில்லுங்கள்' என்கிறார்கள் மருத்துவர்கள். 'கிறிஸ்மஸ் பார்ட்டீஸ்' என்றழைக்கப்படும் விழாக்கால விருந்துகளிலும் ஒருவரையொருவர் வாழ்த்தும்போதும் அணைத்துக் கொள்வதும், ஆரத்தழுவுவதும், முத்தமிடுவதும், கை குலுக்குவதும் இயல்பாக நிகழ்பவை. இது மகிழ்ச்சியின் வெளிப்பாடு.

### நம்பிக்கை, மகிழ்ச்சி அவசியம்

பல்வேறு விதங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் வறுமை நிலையில் உள்ளோர் என இயல்பாக எழக்கூடிய கேள்வி என்ன? இத்தனைக்கும் மத்தியில் நாம் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடத்தான் வேண்டுமா?என்பதே

இன்றைய சூழலில் மட்டுமல்ல புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போதும், 'இந்த வேளையில் விழா அவசியமா?, கொண்டாட்டம் தேவையா?' என்று கேட்கும் சிலர் எப்போதும் இருப்பார்கள்

கார்ல் ரானர், ரானல்ட் ரால்ஹைசர் போன்ற அறிஞர்கள் இக்கேள்விக்குத் தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள். சோதனைகள் சூழும் வேளையில் வேதனையில், விரக்தியில் வீழ்ந்து கிடப்பதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. சோகம் நம்மை முடக்கிப் போடும். சூழ்ந்திருக்கும் சவால்களைச் சந்திக்க நாம் முனைந்து எழ வேண்டும். அப்படி எழுவதற்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அவசியம்

நம் மனதுக்கு வேண்டிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருவதில் திருவிழாக்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. நம்பிக்கையூட்டும் நல்ல நிகழ்வுகளை திருவிழாக்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. அந்த நிகழ்வுகள் நமக்குச் சொல்லும் அருஞ்செய்திகளை அவை மீண்டும் முன்வைக்கின்றன.

### கடவுள் கைவிடவில்லை

மானுடத்தைக் கடவுள் இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதற்கான சான்றே பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் எனச் சொன்னார் மகாகவி தாகூர். அப்படியானால், பிறக்கும் இறைமகன் எதற்கான சான்று?

அவரின் பிறப்பைக் கொண்டாடும் இவ்விழா சொல்லும் செய்தி என்ன? இறைவன் இவ்வுலகை எந்த அளவுக்கு அன்பு செய்கிறார் தெரியுமா? உலகை மீட்க தன் மகனை மனிதனாக அனுப்பும் அளவுக்கு.

எனவே, கவலையும் கண்ணீரும் நிறைந்த சூழலிலும் நாம் இந்த விழாவைக் கொண்டாடியாக வேண்டும். கொண்டாட்ட விருந்துக்கு வழியில்லையே, பரிசுகள் வாங்கப் பணம் இல்லையே என்றெல்லாம் நாம் கவலைப்படத் தேவையில்லை.

பொருள்களோ, பரிசுகளோ இல்லாவிட்டால் என்ன? மனங்களும் கரங்களும் இணைந்திருக்கும்வரை கிறிஸ்மஸ் என்ற அந்த மானுடகுமாரனின் பிறந்த நாள் அளித்த ஒளி நிலைத்திருக்கும்.

கருணையும் மனிதநேயமும் செழிக்கும் இடங்களில், மனங்களில் எல்லாம் கிறிஸ்மஸ் விண்மீன் கண்சிமிட்டும். தெய்வக் குழந்தையின் திருமுகம் மலரும், ஒளிரும். 'நல்மனம் கொண்டோர் அனைவருக்கும் அமைதி' என்று வாழ்த்தும் வானவரின் பாடல் ஒலிக்கும்.

சூழ்ந்திருக்கும் சிரமங்களுக்கு மத்தியிலும் நாம் கொண்டாட வேண்டும். இதுதான் இன்றைய தேவை. எளியோருக்கு உதவி செய்து இருப்பதை பகிர்ந்து எளிமையாய்க் கொண்டாட வேண்டும்.

'உயிராக, நலமாக இறைவா நீ வா இந்த உலகோரின் நிலை கண்டு உடனே நீ வா, நோயோடும் சாவோடும் போராடிடும் உந்தன் சேயோருக்காய் மீண்டும் பிறந்திங்கு வா' என்பதுதான் கிறிஸ்துமஸ் விழாக்காலம் முழுவதும், உலகெங்கும் உள்ள மனிதர்களின் இதயத்திலிருந்து எழுந்துவரும் வேண்டுதலாக இருக்கும்.

துயரங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நம்மைக் காத்தருளும் தேவகுமாரனின் பிறந்த நாள் நம்மில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பெருக்கட்டும்.

எல். செல்வா

# அன்பின் வடிவம்



கிறிஸ்மஸ்!
அன்பின் முழுமை
அவனிக்கு வந்த தினம்

தந்தையின் அன்பு
தரணிக்கு வந்த தினம்.

தூதனின் கர்வம்
விண்ணக பாவத்தின்
துவக்கம்,
ஏவாளின் ஆர்வம்
மண்ணக பாவத்தின்
துவக்கம்,
இயேசுவின் வருகை
அன்பின் பாலத்தின்
தொடக்கம்.

நண்பனுக்காய்
உயிர்தருதல்
அன்பின் உயர் நிலை.
எதிரிக்காய்
உயிர் தருதல்
அன்பின் தேவ நிலை.

இயேசுவின் வருகை
காணா அன்பின்
உருவ நிலை.

மீட்பரின் தொடக்கம்
மீட்பதன் தொடக்கம்.
இறையினை அடைதலே
நிறைவினை அடைதல்.

கிறிஸ்மஸ்
அன்பினைப் போதிக்கிறது.
தன்னலமற்றுத்
தன்னையே தரும்
தாயன்பு.

கழுமரம் நோக்கி
தொழுவினில் உழலும்
பேரன்பு

கற்றுக் கொள்வோம்.

பாலனாய் பிறந்த
பரமனுக்கு
அன்பினை அளிப்போம்.

குடிலினில் பிறந்த
குழந்தைக்கு
பிரியத்தை அளிப்போம்.

மரியிடம் பிறந்த
மழலைக்கு
மனதினை அளிப்போம்.

நினைவில் கொள்வோம்,
அன்பு என்பது
வார்த்தைகளைக்
கொட்டுவதல்ல
செயல்களால்
காட்டுவது !

இயேசுவின் வருகை
அன்பின் செயல்வடிவம் !
அதையே மனதில் கொண்டு
என்றும் செயல்படுவோம்

சேவியர்...

# நமக்காகவே பிறக்கின்றார்

## திருத்தந்தை பிரான்சிஸ்



இயேசுவே நமது மீட்பர், அவர் நாம் எப்படி இருக்கின்றோமோ அப்படியே நம்மை ஏற்க, நம்மைப் போலவே பிறந்து நமக்காக வருகின்றார் என்றும் நம்முடைய வறுமை, துன்பம், நிறை குறைகள் என வாழும் நமக்காக வருகின்றார் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

திரு வருகைக்காலத்தின் மூன்றாம் வாரமாகிய இந்த வாரத்தில் ஹேஸ்டாக் திருவருகைக் காலம் என்ற தலைப்பில் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நமது தேவைகளை உணர்ந்து இயேசு நம்மைத் தேடி வருகின்றார் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மீட்பராகிய இயேசு, வறுமை, துன்பம், நிறை குறைகள் என நாம் இருக்கும் நிலையிலேயே நம்மை நாடி வருகின்றார் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக நமது தேவைகளாகிய நாம் மீண்டு எழும்பப்படவும், மன்னிக்கப்படவும், மீட்கப்படவும் நம்மைப் போல நமக்காக வருகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மெரினா ராஜ்...

# நத்தார் மரம்



நத்தார் மரம் இல்லாத பண்டிகையா என்ற அளவில் தற்போது நத்தார் காலத்தில் வீடுகளிலும் பொது இடங்களிலும் நத்தார் மரங்கள் இடம்பிடித்து விடுகின்றன. டிசம்பர் மாதம் ஆரம்பித்த உடனேயே பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் வீடுகளிலும் ஆலயங்களிலும் நத்தார் மரங்கள் வைக்கப்பட்டு திருவருகைக் காலத்தை வரவேற்பதை காணலாம்.

அந்த வகையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் இன்றியமையாத விடயமாக கிறிஸ்மஸ் மரம் இடம்பெறுகிறது. பசுமையான ஊசியிலையுடன் கூடிய இந்த மரத்தில் ஃபிர், பைன் அல்லது தளிர்கள் இடம்பெற்றிருக்கும்.

இந்த மரத்தை வீட்டின் முகப்பில் அல்லது ஹாலில் ஒரு பகுதியில் வைத்து தங்கள் வீட்டில் கொண்டாட்டம் நடைபெறுகிறது என்கிற அடையாளத்தை கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

கிறிஸ்மஸ் மரத்தில் இலைகளால் மட்டுமல்லாமல் வண்ண விளக்குகள், மெழுவர்த்திகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்த மரம் இருக்கும் இடம் அந்த நாளின் பார்ட்டிகளில் போட்டோ ஷூட் ஸ்பாட்டாகவே அமைந்திருக்கும். இந்த கிறிஸ்துமஸ் மரம் வைப்பதன் பழக்கத்தை சற்று பின்னோக்கி பார்த்தால் அவை மிக நீண்டது. தற்போதையை ஜெர்மனி பகுதிகளில் ஐரோப்பிய கலச்சாரத்தில் ஒன்றான ரினைய்ஸ்சன்ஸ் (மறுமலர்ச்சி) காலத்திலிருந்தே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாக நம்பப்படுகிறது.

புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ சீர்திருத்தவாதி மார்டின் லூதர் என்பவர்தான் முதன்முதலில் மரங்களில் மெழுவர்த்தி ஏற்றி வைத்து புதிய பழக்கத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. இப்போது கிறிஸ்மஸ் மரங்களில் மின்சார வண்ண விளக்குகளை வைத்து அலங்கரிக்கிறார்கள். ஆனால் ஆரம்ப காலத்தில் மெழுகுவர்த்திகளை ஏற்றி வண்ணமயமாக்கினர். அதுமட்டுமில்லாமல் தற்போது மலர் வளையங்கள், மணிகள், வண்ண கையுறை போன்ற ஏராளமான பொருள்களை வைத்து அலங்காரம் செய்கிறார்கள்.

மேலும் பல பொருட்களை வைத்து கிறிஸ்மஸ் மரங்களை அலங்காரம் செய்யும் கை வண்ணங்கள் அதிகரித்துள்ளது. கிறிஸ்மஸ் மரத்தின் மீது காட்டப்படும் அலங்காரம் விருந்தினரை ஈர்க்கும் விதமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, தனித்துவமாக இதை உருவாக்குவதற்கு கிறிஸ்மஸ் மாதத்தின் தொடக்கத்திலிருந்தே பலரும் அலங்காரப் பணிகளை தொடங்கிவிடுவார்கள்.

அந்த அலங்காரங்கள் ஜனவரி மாதம் பிறந்து மூன்று ஞானிகள் இயேசு பாலனை சந்திக்க வரும் மூன்று ராஜாக்கள் திருவிழா தினம் வரை தொடரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல். ஜேம்ஸ்...





யாராவது மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? ஆம். இரண்டுபேர் மகிழ்ச்சியாய் இருக்கின்றனர். ஒருவர் இன்னும் பிறக்கவில்லை ; மற்றவர் ஏற்கெனவே இறந்துவிட்டார். அப்படியானால் உயிருடன் இருப்பவர் எவரும் மகிழ்ச்சியாய் இல்லை, "வந்தவனைக் கேட்டால் சென்றுவிடு என்பான். சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான் ஒரு கவிஞர் பாடியுள்ளார். இத்தயை சூழ்நிலையில் திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு 'மகிழ்ச்சியின் ஞாயிறு' என்று அழைக்கப்படுகிறது.

இது நம்மை ஆண்டவரில் மகிழ அழைக்கின்றது.

# மகிழ்ச்சியின் வாரம்

ஏனெனில் ஆண்டவர் அண்மையில் உள்ளார் (பிலி 4:45). இன்றைய முதல் வாசகம் கூறுகிறது: “ஆண்ட வரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும்" (எசா 61:10), இன்றைய பதிலுரைப் பாடலில் மீட்பரின் தாய் மரியா, "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை திளைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது" (லூக் 1:47) என்று பாடுகிறார். இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்" (1 தெச 5:16) என்று அறிவுறுத்துகிறார். இன்றைய நற்செய்தியில், தன் தாயின் வயிற்றில் இருந்தபோதே மீட்பரை அடையாளம் கண்டு பேருவகையால் துள்ளிய திரு முழுக்கு யோவான் (லூக் 1:44) கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதில் மகிழ்ச்சி அடைகிறார். எனவே, ஞாயிறு வழிபாடு மகிழ்ச்சியில் தோய்ந்துள்ளது.

எத்தயை சூழ்நிலையிலும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஏனெனில் ஆண்டவர் அண்மையில் உள்ளார். ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். ஆண்டவர் நமக்காக இருக்கிறார். "கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?" (உரோ 8:31), தாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கடவுள் இஸ்ரயேல் மக்களை பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு அருள் தரும் ஆண்டை அருளப்போவதாக வாக்களித்தார் (முதல் வாசகம்). கிறிஸ்துவில்தான் விடுதலை ஆண்டு நிறைவடைகிறது (லூக் 4:1522). நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், ஏனெனில் மரியாவின் விடுதலைப் பாடலில் மரியா கூறுகிறார்: "கடவுள் பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்" (லூக் 1:53).

கடவுள் என்றும் ஒடுக்கப்பட்டவர்களின் சார்பில் இருக்கிறார். பணக்காரர்களைவிட எழைகள் தான் மகிழ்ச்சியாய் இருக்கின்றனர், நரிக்குறவனும் குறத்தியும், "நாங்கள் புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க, நல்ல பாட்டுப் படிக்கும் வானம்பாடிதானுங்க" என்ற பாடி ஆனந்தமாய் இருக்கின்றனர். ஆனால் பணக்காரர்களோ, "பால் இருக்கும், பழம் இருக்கும், பசி இருக்காது. பஞ்சணையில் காற்று வரும், தூக்கம் வராது" என்று வேதனையுடன் பாடுகின்றனர். இவ்வுலகம் தரும் மகிழ்ச்சி உணவிலும் பானத்திலும் அடங்கியுள்ளது. ஆனால் இறையாட்சியின் மகிழ்ச்சி தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது (உரோ 14:17), "கிறிஸ்து தூய ஆவியால் பேருவகை அடைந்தார்" (லூக் 10:21) என்று நற்செய்தியில் வாசிக்கிறோம். மகிழ்ச்சி என்பது நம் மனநிலையைப் பொறுத்துள்ளது. நாம் நரகத்தில் இருந்தாலும் அது சொர்க்கம் ஆகிவிடும்.

அருட்பணி வை. இருதயராஜ் ...



விமான சேவை தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்துவதற்கு 'குவன் சிஹினய' தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக தேசிய தொலைக்காட்சியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில்,போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும், விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். ஒப்பந்தத்தில் தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதன் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான .பி.ஏ.ஜெயகாந்த ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி

பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. பெரிய வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. தற்போது சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## இன்றைய பலன்கள்

### (19. 12. 2023)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.

**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.

**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.

**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.

**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.

**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

# போதகர் ஜெராமின் மனுவை நிராகரிக்குமாறு மனு தாக்கல்



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனுவை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் நேற்று (18) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

இந்த ஆரம்ப கட்ட ஆட்சேபனைகள் மீதான உத்தரவு இம்மாதம் 20ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவினால் முன்வைக்கப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி, ஷமிந்த விக்கிரம இந்த ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்தார். பௌத்தம் மற்றும் ஏனைய மதங்களை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யுமாறு கோரியே ஜெரோம் பெர்னாண்டோ மனுவை தாக்கல் செய்தார்.

## ஜனாதிபதி ரணிலே...

அவ்வாறு அவர், 100 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி யாவார் என தாம் ஏற்கனவே தெரிவித்த கூற்று நகைச்சுவையானதல்ல, என்றும் அவரது செயற்பாடுகளை கண்காணித்தே தெளிவாக அதனை குறிப்பிட்டுள்ளதாகவும் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏனைய அரசியல் தலைவர்களை விட வித்தியாசமானவர் மட்டுமன்றி பொருளாதார நிபுணருமாவார். அந்த வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இந்த நாடு எந்த இடத்தில் இருக்கவேண்டும் என்பதை தூர தரிசனத்தோடு நோக்கி அதற்கான செயற்றிட்டங்கள முன்னெடுத்து வருகின்றார்.

இதுவரை இந்நாட்டில் எந்தவொரு ஜனாதிபதியும் பெற்றுக்கொள்ளாத அதிகளவு வாக்குகளை அவர் பெற்றுக் கொள்வது உறுதி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'தற்போதுள்ள எதிர்க்கட்சியும் எம்முடையதே' எனக் கூறி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில், எதிர்க்கட்சி இருப்பதேன். தேர்தலின்போது உண்மையான எதிர்க்கட்சியை மக்கள் தேர்ந்தெடுப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இறுதியில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரிடத்திலேயே சேர்வர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெளியுறவுக் கொள்கையில்...

மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி; அமைதி காத்தல், காலநிலை மாற்றம் மற்றும் பல்வேறு உலகளாவிய தாக்கங்கள் இலங்கையின் சர்வதேச உறவுகளின் மூலோபாயத்தின் மையத் தூண்கள்.

1978ஆம் ஆண்டு நான் இளைஞர் விவகார அமைச்சராக கடமையாற்றியபோதே, இராணுவத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன. அப்போதைய இராணுவத் தளபதி மறைந்த ஜெனரல் டென்னிஸ் பெரேரா, தியத்தலாவில் இராணுவக் கல்லூரியை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்தார்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்தனவிடம் இது குறித்து அவர் தெரிவித்தார். இதன்படி இக்கல்லூரியை அமைப்பது குறித்து ஆலோசித்தோம். தியத்தலாவைக்கு வழங்கக்கூடிய சிறந்த விடயம் இராணுவ கல்லூரியே என்பதை நான் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டினேன்.

இப்போது இங்கு கூடியிருக்கும் வருங்கால உத்தியோகத்தர்களின் விளக்கவுரைகளைக் கேட்கும் போது, அன்று நாம்,எடுத்த தீர்மானம் சரியென உணர நேரிடுகிறது.

நான், சில நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டது போல், இராணுவத்தின் தரம் அதன் அதிகாரிகளிலும் அவர்களின் திறமையிலும் உள்ளது. பயிற்சி மூலமே இவற்றை அவர்கள் பெறுகின்றனர்.

உயர் தரத்திலான உபகரணங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மேம்பட்ட பயிற்சி இருந்தால், உபகரணத்தின் குறைபாடுகளைக் கூட நிவர்த்தி செய்துகொள்ள முடியும். எல்லாவற்றுக்கும் அடிப்படையான சிறந்த கல்வி முறையைக் நாம் கொண்டிருப்பது, இலங்கையில் உள்ள எமக்கு விசேட அனுகூலமாகும். இதுவரையில் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் செயற்பட்டு வருகிறோம். அதனை நாட்டின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஒட்டுமொத்த அங்கமாக நாம் கருதவில்லை. இதுதான் இங்கு நாம் செய்த வேறுபாடு. இது நமது வெளியுறவுக் கொள்கை மற்றும் நமது பாதுகாப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். எனவே, எடுத்துக்காட்டாக, இலங்கையின் புதிய வெளியுறவுக் கொள்கையில், அமைதி காத்தல், காலநிலை மாற்றம், சர்வதேச உறவுகளில் எமக்கு முக்கியமான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படும். இனி, அது வெறும் அரசியல் உறவுகளோ அரசியலோ அல்ல.

இது தொடர்பாக நாம் அண்டை நாடுகளுக்கு குறிப்பாக மாலைதீவுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கக்கூடிய சேவைகள் குறித்து தெரியப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சேவைகள் கட்டளைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## குற்றச்செயல்கள், போதைப்பொருளை...

மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், இவர்களில் 12 சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைப்பதற்கான உத்தரவை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, 5 சந்தேக நபர்களுடைய சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், மேலும் 133 சந்தேக நபர்களை புனர்வாழ்வுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 'யுக்திய' என்ற பெயரில்மேற்கொள்ளப்படும் மேற்படி நடவடிக்கைகள் கடந்த 17ஆம் திகதி அதிகாலை முதல் ஆரம்பமாகின.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,

போதைப் பொருள் குற்றவாளிகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்யும் நடவடிக்கைகள் கடந்த 17ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 23ஆம் தேதி வரை முன்னெடுக்கப் படவுள்ளது. நாடளாவிய ரீதியில் 45 பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கியதாக இச்சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இதுவரை

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 2Kg 232g ஹெராயின், 769g ஐஸ், 178 Kg 916g கஞ்சா, 30,550 கஞ்சா பைகள், 35Kg 89g Ash போதைப்பொருள் ,626g மாவா ,102g தூள் ,3489 போதை மாத்திரைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நுவரெலியாவில் வெளிநாட்டு...

வேண்டும். அப்போதுதான், அந்த மாணவர்களுக்கு சமூகத்தில் கௌரவம் மேலும் அதிகரிக்கும் இதற்கான முதல் கட்டத்தை மேற்கொண்டுவருகிறோம் என்றும் அமைச்சர் கூறினார். இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், "இன்று காலை நான் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் எச்.ஐ.விக்குள்ளாகின்றமை மற்றும் வெளிநாடுகளுக்கு செல்லவதில் பாராபட்சம் இடம்பெறும் ஒரு சாரர் குறித்த விடயம் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு சமூகமயமாக்குவது என்ற கேள்விக்கு விடை காணவேண்டிய முக்கியத்துவம் அதில் குறிப்பிடப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் இருந்து அதிகளவான மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக செல்கின்றனர். இதன் போது இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க கொழும்புக்கு, கண்டிக்கு அல்லது பதுளைக்கு செல்ல வேண்டியுள்ளது. இவ்வளவு தூரம் சென்றாலும் அலுவலகங்களில் இருக்கும் அதிகாரிகளுக்கு அவர்கள் பேசும் மொழி தெரியாதுள்ளது. இவற்றை கருத்திற்கொண்டே நுவரெலியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறக்கப்படவுள்ளது.

## நுளம்பு பரவலை தடுக்க...

தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு, மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதேவேளை, நேற்றும் (18) மற்றும் இன்றும் (19) விசேட பூச்சியியல் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 82036 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் 49 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மாணவர்கள் மத்தியில்...

வாய் மற்றும் உதட்டு வட்டத்தில் வெள்ளை நிற அறிகுறிகள் தோன்றுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இக்காலத்தில் பாடசாலை மாணவர்கள் வர்ண பக்கற் செய்யப்பட்டுள்ள வெற்றிலையை உட்கொள்வதால். இந்நோய் அதிகரிப்பதாக தேசிய பல் வைத்தியசாலையின் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் ஏ .எச். பி. எஸ் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பெற்றோர் அவ்வாறான பிள்ளைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவ்வாறான வர்ண வெற்றிலைகளை உட்கொள்வதிலிருந்து அவர்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதே வேளை இக்காலங்களில் தேசிய பல் வைத்தியசாலைக்கு இவ்வாறான புற்றுநோய் கொண்ட ஐந்துக்கும் இருபதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் தினமும் சிகிச்சைக்காக வருகை தருவதுடன் அந்த எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஊடகவியலாளர்...

காதர், கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றியுள்ளார். இலங்கையின் தேசிய பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் அவர் ஏராளமான ஆக்கங்களை எழுதியுள்ளார். செய்தி, கட்டுரை போன்றவற்றில் மாத்திரமன்றி இலக்கியத்திலும் மிகுந்த ஆற்றல் கொண்டவராக அவர் விளங்கினார்.

பிரதேச மட்டத்திலும், தேசிய ரீதியிலும் பெருமளவு விருதுகளை அவர் பெற்றுள்ளார். இளைய ஊடகவியலாளர்களுக்கு சிறந்ததொரு வழிகாட்டியாக காதர் திகழ்ந்தார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று மருதமுனையில் நடைபெற்ற போது ஊடகவியலாளர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள் உட்பட ஏராளமானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## சிறுமி கில்மிஷா...

இந்நிலையில், இறுதிச் சுற்றுக்குச் செல்லும் வாய்ப்பை அசானி தவற விட்டிருந்தார். எனினும், மலையக மக்களின் அடையாளமாக அவர் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய தொலைக்காட்சிகளில் நடைபெறும் இசை போட்டி நிகழ்வொன்றில், இலங்கையைச் சேர்ந்த ஒருவர் வெற்றி பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

கில்மிஷாவுக்கு பல்வேறு பிரபலங்களும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

## அரசுகள் மாறினாலும்...

அமைச்சர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கில் சர்வதேச முதலீட்டு செயலமர்வு ஒன்றை அடுத்த வருடம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்காக இரண்டு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த நிதியை டிஜிட்டல் மயமாக்கலுக்கு பயன்படுத்துவதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை மக்கள் அதன் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். "ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படும் வரை, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய வார்த்தைகள் இந்நாட்டில் மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன. ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையினால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவை இலகுவாகப் பயன்படுத்த முடியும்.

உலக நாடுகளில் இந்த முறைமைகளைப் பயன்படுத்தி, பொருளாதாரம் எவ்வாறு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டுகொள்ள முடிந்துள்ளது.

முன்னேறும் உலகுடன் இணைந்து, நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இதன்படி, நாட்டின் பொருளாதாரத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் வழங்கி வந்த பங்களிப்பை 03 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## சுகாதார அமைச்சின்...

வழங்கல் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கபில விக்ரமநாயக்க உள்ளிட்ட நான்கு அதிகாரிகள் ஏற்கனவே குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச சாரதி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் கடன் முறுகல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபை பஸ் சாரதியான சிங்காரத்தினம் சிவாஸ் குமார் (வயது 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ஊரெழு பகுதியைச் சேர்ந்த இளைஞனிடம் ரூ. 800 பணத்தை திருப்பு தருவதாக கூறி கடனாக பெற்றுள்ளார்.

அந்த பணத்தை திருப்பி வழங்காமையால்அ கடந்த 10ஆம் திகதி கடன் கொடுத்த இளைஞன், கடன் வாங்கியவருடன் முரண்பட்டு , அவர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்.

தாக்குதலின் பின்னர் அவரை வீட்டுக்கு அழைத்து சென்று அவரது வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டு, இளைஞன் சென்றுள்ளார்.

மறுநாள் தாக்குதலுக்கு இலக்கானவரின் உடல்நிலை மோசமான நிலையில் இருந்தமையால் வீட்டார் அவரை யாழ்,போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

சிகிச்சைப் பெற்று வந்தவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## பாடசாலை மாணவர்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ் அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ் சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா, கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.றஸ்மி, ஏ.எல்.செய்னுடின், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. தாஹிர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் 16 பாடசாலைகளும், அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் 10 பாடசாலைகளும், பொத்துவில் கல்விக் கோட்டத்தில் 21 பாடசாலைகளும் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

## சீரற்ற காலநிலை...

அதேவேளை இன்று பிற்பகலின் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நீர்ப்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான முக்கிய நீர்தேக்கங்களில் நீரின் மட்டம் நூற்றுக்கு 80 வீதமான அதிகரித்துள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அநேகமான நீர்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.பி.சி.சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

## இந்திய முட்டைகள்...

முட்டைகளுடனான கப்பலொன்று நேற்று இரவு நாட்டை வந்தடைந்தது.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் லங்கா சதொச ஊடாக 35 ரூபாவுக்கு விநியோகிக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதன்படி, நுகர்வோர் தமக்கு தேவையான அளவு முட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சதொச விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்வதற்கு போதுமான முட்டைகள் இல்லை என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

## பாடசாலைகளை அண்மித்த...

இவ்வாறு பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு பொருட்களையும் விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்து வியாபாரக் கூடங்களையும் அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து வரும் பாடசாலை தினத்திற்கு முன்பதாக இது தொடர்பில் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அந்த வகையில் அவ்வாறான வர்த்தகக் கூடங்கள் இந்த பாடசாலை விடுமுறை காலத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இது சம்பந்தமாக அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# நல்லிணக்க பொறிமுறைக் குழு யாழ். விஜயம்




உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம் (ISTRM) ‘தேசிய ரீதியாக பொது மக்கள் கருத்தறியும் நடவடிக்கையை வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக ஆரம்பித்தது.

சிவில் சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள், சிரேஷ்ட பேராசிரியர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமூக அமைப்பு பிரதிநிதிகள், பெண் உரிமை இயக்கங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுடன் கடந்த 10 முதல் 12 வரை சந்திப்புக்களை நடாத்தின.

இடைக்கால செயலக அதிகாரிகள் குழுவின் யாழ்ப்பாண விஜயமானது, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான நிலையான கட்டமைப்பை உருவாக்குவதற்கான விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தடையாக உள்ள சமூக சவால்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகள் பற்றிய விரிவாக இந்தச் சந்திப்புக்களில் ஆராயப்பட்டன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பிரதம குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் வண. கலாநிதி ஜெஸ்ரின் பீ ஞானப்பிரகாசம், யாழ். நாக விகாரையின் தம்மிக தேரர் உள்ளிட்ட மதத் தலைவர்களுடன் இடைக்காலச் செயலக அதிகாரிகள் குழு முக்கிய கலந்துரையாடல்களை மேற்கொண்டன.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகள், கருத்துக்கள் மற்றும் கவலைகள் தொடர்பில் சமயத் தலைவர்கள் இதன் போது கருத்துத் தெரிவித்ததுடன், நாட்டில் இன நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு நல்லிணக்க செயற்பாடுகள் வெற்றியடைய பிரார்த்தனை செய்ததுடன் ஆசிகளையும் வழங்கினர்.

இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச, இடைக்கால செயலகத்தின் செயற்பாடுகள் குறித்து மதத் தலைவர்களுக்கு விளக்கமளித்ததுடன், பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்த விளக்கங்களையும் வழங்கினார்.

முக்கிய பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட விரிவான பொது ஆலோசனைச் செயல்பாட்டில் பணிப்பாளர் நாயகத்தின் நிறைவேற்று மற்றும் சட்ட அதிகாரி அஷ்வினி ஹபங்கம,கொள்கைப் பிரிவுப் பிரதானி கலாநிதி யுவி தங்கராஜா, இடைக்கால செயலகத்தின் மக்கள் தொடர்பு மற்றும் கொள்கைப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரும் இதில் பங்கெடுத்திருந்தனர்.






## பாலமுனை பாறூக்கின் நூல் அறிமுக விழா









"பாலமுனை பாறூக்கின் 50 எழுத்து ஆளுமைகள்" எனும் நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் சனிக்கிழமை (16) மாலை நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் அருகில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பேராசிரியர்களான சபா ஜெயராசா, எம்.எஸ்.எம். அனஸ் ஆகியோர்களையும் தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவ இராமசாமி உட்பட ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

## "தினமின" பத்திரிகையின் 114ஆவது பிறந்தநாள் விழா






எமது சகோதர பத்திரிகையான "தினமின" பத்திரிகையின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹரேந்திர காரியவசம், ஆசிரியர் குழு பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, சட்ட மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்தின, தினமின ஆசிரியர் மனோஜ் அபயதீர, சிலுமின ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன, டெய்லி நியூஸ் மற்றும் சண்டே ஒப்சேர்வர் ஆசிரியர் பிரமோத் த சில்வா, தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஆசிரியர் செந்தில் வேலவர், பிரதி பொது முகாமையாளர் சந்தன பண்டார, பிரதி பொது முகாமையாளர் பிரமிதா ஜயமஹா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



# 75 வருடகால பயணத்தில் பெரு வளர்ச்சி கண்டுள்ள கலேவெல, அல் புர்கான் முஸ்லிம் ம.வி




பல்வேறு வளர்ச்சிப்படிகளைத் தாண்டி பயணித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையான அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயம் கலேவெல வலயத்தில் மட்டுமல்லாது மத்திய மாகாணத்திலும் பிரசித்திபெற்ற பாடசாலையாக விளங்கு கின்றது. மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் எழில் கொஞ்சும் நமடகஹவத்தை கிராமத்தில் அமையப்பெற்றுள்ளதே எமது பாடசாலையாகும். பல்வேறு வளர்ச்சிப்படிகளை எட்டி கோலாகல மாக தன் பவள விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் எமது பாடசாலை 1947 இல் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வகையில் இப்பாடசாலையின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சியினை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாடசாலையின் ஆரம்பப் பின்னணி

1872 ஆம் ஆண்டு பௌதீக ரீதியாகவும் வணிக ரீதியாகவும் பிரசித்திபெற்ற கொழும்பு திருகோணமலை பிரதான வீதியில் அமையப் பெற்றிருக்கும் கலேவெல நகரில் கல்விக்காக வேண்டி சுயமொழிப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. 1921ஆம் ஆண்டு இச்சுயமொழிப் பாடசாலையின் நிரந்தர கட்டடம் புதிய இடம் (இன்றைய கலேவெல வைத்திய சாலை அருகில்) ஒன்றுக்கு மாற்றப்பட்டது.

இப்பாடசாலையில் சிங்கள மொழியூடாக கற்பித்தல் இடம்பெற்றதோடு படிப்படியாக மாணவர்களின் எண்ணிக்கை உயரத் தொடங்கியது. இவ்வாறு பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை நமடகஹவத்த, ரங்வெடியாவ, பட்டிவெல, பம்பரகட்டுபொத்த ஆகிய முஸ்லிம் பிரதேசங்களைச் சேர்ந்த பெற்றோருக்கு தமது பிள்ளைகளை தமிழ் மொழியில் படிப்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாக கல்வியியலாளர் டீ.பீ ஜாயா அவர்களின் முயற்சியின் காரணமாக கலேவெலயில் இயங்கிவந்த கலேவெல சிங்களப் பாடசாலையில் தமிழ்ப்பிரிவு 1925.11.09 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய கட்டிடமானது மூன்றாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு பிரிவில் தமிழ்ப்பிரிவு நடாத்தப்பட்டது. தமிழ்ப்பிரிவு ஆரம்பித்த நாள் தொடக்கம் 1947.03.02 ஆம் திகதி வரை தமிழ்ப்பிரிவின் தலைமை ஆசிரியராகவும் பொறுப்பாளராகவும் சேகு அபூபக்கர் பணியாற்றியுள்ளார். அபூபக்கர் வாத்தியார் என்ற பெயரில் அவர் அழைக்கப்பட்டார். தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்கள் இங்கு நடைபெற்று வந்தன.

எனவே, நமடகஹவத்தை கிராம மாணவர்கள் கலேவெல சிங்களப் பாடசாலைக்குச்சென்று கற்க வேண்டிய ஒரு சூழ்நிலையே அன்று காணப்பட்டது. இதனால் மாணவிகளும் கற்றலில் ஆர்வம் காட்டவில்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே நமடகஹவத்தை கிராமத்துக்கு சிங்களப் பாடசாலையின் தமிழ்ப்பிரிவு கொண்டுவரப்பட்டு தனிப்பாடசாலை அமைக்கப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு தலைத்தோங்கியது. இதன் பிறகு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அறிஞர் டீ.பீ ஜாயா அவர்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நமடகஹவத்தைக்கு தமிழ்ப்பிரிவு மாணவர்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சியில் மகத்தான பங்களிப்புக்களை வழங்கிய சேர் ராஸிக் பரீட் அவர்கள் எமது கிராமமான நமடகஹவத்தையில் முஸ்லிம் பாடசாலையினை அமைப்பதற்கு முன்னோடியாக இருந்துள்ளார்.

பாடசாலை அமைப்பதற்கு தேவையான காணிப் பகுதியொன்றினை பெற்றுக்கொள்வதற்காக சேர் ராஸிக் பரீட், டீ.பீ. ஜாயா ஆகியோர் எமது கிராமத்துக்கு வருகை தந்தனர். ஏனெனில் தனிப் பாடசாலையினை அமைப்பதற்கு காணியின் தேவைப்பாடு இன்றியமையாததாக காணப்பட்டது.

இவ்வாறு காணியின் தேவைப்பாடொன்று உருவாகியிருந்த இக்கட்டான சூழ்நிலையிலேயே தனது காணியினை மனமுவந்து பாடசாலை அமைப்பதற்காக சேகுக்கண்டு மீரா சாஹிப் முதலாளி அவர்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள். பஸ்ஸப்பா என்ற பெயரிலும் இவரை அழைப்பதுண்டு. தனது மகனுக்காக ஒதுக்கி வைத்திருந்த காணிப் பகுதியினையே இவர் பாடசாலையின் காணித் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்யும் பொருட்டு தாராளமனதுடன் மனமுவந்து அன்பளிப்புச் செய்தார். இவரது இந்தப் பங்களிப்பு நமடகஹவத்தையில் முஸ்லிம் பாடசாலையின் தோற்றத்துக்கும் உதயத்துக்கும் விலைமதிக்க முடியாத பங்களிப்பாக இருந்தது என்றால் அது மிகையாகாது. எனவே, நமடகஹவத்தையில் அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பதன் தோற்றம் எனும்போது சேர் ராஸிக் பரீட், டீ.பி ஜாயா, சேகுகண்டு மீரா ஸாஹிபு (பஸ்ஸப்பா) ஆகியோரை எம்மால் மறக்க முடியாது.

நமடகஹவத்தையில் பாடசாலையினை ஆரம்பிப்பதன் முதற்கட்டமாக 100 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட களிமண் மற்றும் ஓலையை கொண்ட கட்டடமொன்று அமைக்கப்பட்டது. 1947.03.03 ஆம் திகதி தொடக்கம் பாடசாலையின் பொறுப்புக்களை கே.பி சதாசிவம் பொறுப்பேற்றுக் கொண்டமையினை வரலாற்று புத்தகத்தின் ஊடாக எம்மால் அறிந்து கொள்ள முடியும். எனவே, தற்போதைய அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முதல் அதிபராக கே.பி சதாசிவம் அவர்களை குறிப்பிடலாம். (மூலம்: சம்பவத் திரட்டுப் புத்தகம்) இவ்வாறு அமைக்கப்பட்ட முதற்கட்டத்துக்கு கலேவெல சிங்களப் பாடசாலையின் தமிழ்ப் பிரிவினைக்கொண்டு வரும் நாள் தீர்மானிக்கப்பட்டது. ஆம், அன்றைய தினமே அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் உதய தினமாகும். சம்பவ திரட்டுப் புத்தகத்தின் படி 1947.03.08 ஆம் திகதியே எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாள் ஆகும்.

கே.பி சதாசிவம் தலைமையில் புவக்பிடிய சந்தியிலிருந்து ஊர்வலமாக அதிதிகள் அனைவரும் அழைத்து வரப்பட்டனர். கல்வியியலாளர் டீ.பீ. ஜாயா உள்ளிட்ட ஏனைய பல அதிதிகள் கலந்துகொண்ட இவ்விழாவில் அதிதிகளை வரவேற்க ''மாண்புமிக்க சபையோரே மனமார வாழ்த்துகின்றோம்'' என்று ஆரம்பிக்கும் பாடல் வரிகளைக் கொண்ட வரவேற்புக் கீதம் இசைக்கப்பட்டு மேளதாளங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பிரபல கல்வியியலாளரான டீ.பீ ஜாயா அவர்களால் 'அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை' என்ற பெயரில் எமது கிராமத்தில் பாடசாலை திறந்து வைக்கப்படுகின்றது. இந்நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளொன்றாக எம்மால் உற்றுநோக்க முடியும்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையில் மாணவர் அனுமதிப் பதிவு 1947.03.10 ஆம் திகதியில் இருந்து தொடங்கியது என்பதனை பாடசாலை அனுமதி பதிவேட்டிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அதன்படி மாணவர் அனுமதி பதிவேட்டில் முதலில் அனுமதிக்கப்பட்ட மாணவராக கா. அப்துல் சமது அவர்கள் காணப்படுகின்றார்.

### முதல் ஐந்து மாணவர்கள் வருமாறு;

- ★ கா. அப்துல் சமது
- ★ ஹ. நாகூர் பிச்சை
- ★ முஹம்மது பஸீர்
- ★ கா. சுபைர்,
- ★ அ. அப்துல் அஸீஸ்

இவ்வாறு முதல் தொகுதி மாணவர்கள் எண்ணிக்கை 60 ஆகவும், 1948 இல் மாணவர் தொகை 106 ஆகவும் மாற்றமடைந்தது. மேலும் களி மண்ணால் கட்டப்பட்ட தற்காலிக கட்டடமானது இன்றைய அதிபர் அலுவலகமாக காணப்படும் கட்டடப்பகுதியில் காணப்பட்டதாக ஆரம்பகால மாணவர்கள் தெரிவிப்பதோடு பாடசாலையில் காணப்பட்ட 'எஹெட்டி' என்ற மரத்தின் கீழ் எழுத்துக்களை எழுதிப் பழகியதாகவும் குறிப்பிடுகின்றனர். (மூலம் பீ. செய்னுல் ஆப்தீன்)

களிமண் பூசப்பட்ட ஓலையால் வேயப்பட்ட கட்டிடமானது தற்காலிக முதற் கட்டடமாக விளங்கியதோடு பாடசாலையின் நிரந்தர முதற் கட்டடம் இன்றைய பிரதான மண்டபம் அமைந்துள்ள கட்டடம் (Meerasahib Memorial Hall) ஆகும். இரண்டாவது கட்டடம் 1973இல் நிர்மாணிக்கப்பட்டது. மூன்றாவது கட்டடம் 1977 இல் நிர்மாணிக்கப்பட்டது. நான்காவது கட்டடம் 1990இல் கட்டப்பட்ட கட்டடமாகும் . ஐந்தாவது கட்டடம் 1999இல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும். ஆறாவது கட்டடம் 2006 இல் நிர்மாணிக்கப்பட்டது. இது இன்று அர் ரஹ்மத் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் கற்கக்கூடிய இடமாக காணப்படுகின்றது. அதேபோல தொழில்நுட்ப ஆய்வுக்கூட கட்டடம் 2016ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

### எமது பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள்;

எமது பாடசாலையின் முதல் அதிபர் திரு. சதாசிவம் 1947.03.03 தொடக்கம் 1947.11.27 வரையும் ஆப்தீன் அதிபர் 1947.11.28 தொடக்கம் 1951.01.04 வரையும் சஹாப்தீன் அதிபர் 1951.01.05 தொடக்கம் 1952.04.30 வரையும் அலியார் லெப்பை அதிபர் 1952.05.01 தொடக்கம் 1956.06.27 வரையும் ஹசன் அதிபர் 1956.06.28 தொடக்கம் 1958.03.01 வரையும் அலியார் லெப்பை அதிபர் 1958.03.02 தொடக்கம் 1958.12.31 வரையும் யூனுஸ் அதிபர் 1959.01.01 தொடக்கம் 1974.02.08 வரையும் சேவையாற்றினர்.

தொடர்ந்து 1974.02.09 தொடக்கம் 1976.08.24 வரை ஆரித் அதிபரும் முனவ்வர் அதிபர் 1976.08.25 தொடக்கம் 1977.01.01 வரையும் அலவி அதிபர் 1977.01.02 தொடக்கம் 1977.02.26 வரையும் உசைர் அதிபர் 1977.03.27 தொடக்கம் 1978.05.10 வரையும் ராஸிக் அதிபர் 1978.05.11 தொடக்கம் 1980.04.30 வரையும் நிஜாம் அதிபர் 1980.05.01 முதல் 1980.07.14 வரையும் பஸீர் அதிபர் 1980.07.15 முதல் 1981.02.17 வரையும் ஸ்ரீபதி அதிபர் 1981.02.18 முதல் 1982.02.08 வரையும் லதீப் அதிபர் 1982.03.01 முதல் 1984.01.22 வரையும் தொடர்ந்து சமீன் அதிபர் 1984.01.23 முதல் 1984.04.08 வரையும் கடமைபுரிந்தனர். அடுத்து புஹார்தீன் அதிபர் 1984.04.09 தொடக்கம் 1991.09.02 வரையும் முஹம்மத் அதிபர் 1991.09.03 முதல் 1995.02.22 வரையும் முஹம்மத் அலி அதிபர் 1995.02.23 முதல் 1997.06.04 வரையும் முஜாஹிதீன் அதிபர் 1997.06.05 முதல் 2017.02.05 வரையும் ஜலீல் அதிபர் 2017.02.26 முதல் 2019.11.29 வரையும் அதிபர்களாக பணியாற்றியுள்ளதோடு தற்போதைய அதிபராக சமீர் அதிபர் 2019.11.30 முதல் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அல் புர்கான் வரலாற்றில் அதிபர் யூனுஸ் அவர்களின் சேவைக்காலம் பொற்காலமாகும். எமது பாடசாலைக்கு அல்புர்கான் என்ற பெயர் சூட்டப்பட்டு பாடசாலை மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டதும் இக்காலத்திலேயாகும்.

கல்விரீதியான வளர்ச்சி, பௌதீக வள அபிவிருத்தி என்பன ஊடாக பாடசாலையில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியதனால் பாடசாலை வரலாற்றில் இவருடைய காலம் பொற்காலமாகும்.

அதிபர் புஹார்தீன் அவர்களுடைய சேவைக்காலத்தில் பாடசாலை பல அபிவிருத்திகளை எட்டியது. கல்விரீதியான அபிவிருத்தி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், பௌதீக வள அபிவிருத்தி என அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியினை ஏற்படுத்தி அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயமானது புதியதொரு பரிணாமத்துக்கு செல்ல வித்திட்ட காலப்பகுதி அதிபர் புஹார்தீன் அவர்களின் சேவைக் காலம் என்றால் அது மிகையாகாது.

19 வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றிய முஜாஹிதீன் அதிபர் தன்னுடைய சேவைக்காலப் பகுதியில் அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயம் பல்வேறு வளர்ச்சிப் படிகளை எட்டுவதற்கு ஆணிவேராக இருந்தார் என்று கூறுவது மிகவும் பொருத்தமானதாகும். இவருடைய சேவைக்காலப்பகுதியில் மாணவர்கள் தொடர்ச்சியாக பல்கலைக் கழகத்துக்கு செல்லக்கூடிய வரம் பெற்றனர். ஆசிரியர் பற்றாக்குறை, பாடசாலையின் கட்டிடத் தேவை என்பவற்றை நிறைவு செய்து மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் அதிகரிக்க தன்னாலான அனைத்து பங்களிப்புக்களையும் வழங்கியதால் இவருடைய சேவைக்காலம் அல் புர்கானின் 75 வருடகாலப் பகுதியில் மறுமலர்ச்சிக் காலமாகவும், பொற்காலமாகவும் கருதப்படுகின்றது.

தொடர்ந்து, அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பினை ஏற்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் சமீர் அதிபர் பாடசாலையை திறம்பட வழிநடத்திச் செல்வதோடு பாடசாலையின் அபிவிருத்தி இணைப் பாடவிதான செயற்பாடுகள், மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள், பாடசாலை சுற்றுப்புறச்சூழல் என அனைத்து விடயங்களிலும் ஆர்வம் காட்டி தன்னுடைய பங்களிப்பினை அதிபர் என்றவகையில் பாடசாலைக்கு வழங்கிக் கொண்டு இருப்பதனால் பாடசாலை பல்வேறு வெற்றிகளையும் அடைவுகளையும் கண்டு வருகின்றது. க.பொ.த.(உயர்தர) கணிதப் பிரிவு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டதோடு உயர்தர வர்த்தகப்பிரிவு மீள ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையின் பவள விழா நிகழ்வுகள் அதிபரின் சேவைக்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதானது மென்மேலும் பாடசாலைக்கு மெருகூட்டக் கூடியனவாக இருக்கின்றன.

இவ்வாறான ரீதியில் 75 வருடகால வரலாற்றினை கொண்ட எமது பாடசாலை கண்ட சாதனைகளும் வெற்றிகளும் பலவாகும். 1925 இல் 26 ஆக இருந்த மாணவர் தொகை இன்று 700 இனை எட்டியுள்ளது. எனினும் 2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு மாணவர் தொகையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அதற்கான காரணம் அல் புர்கான் பாடசாலையில் இருந்த ஆரம்ப வகுப்புக்கள் அர் ரஹ்மத் ஆரம்ப பாடசாலைக்குள் உள்ளடக்கப்பட்டு தனி பாடசாலையாக இயங்கத் தொடங்கியுள்ளமையாகும்.

ஆகவே, தற்போதைய எமது பாடசாலையானது தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரையான வகுப்புக்களை கொண்டு 1சீ பாடசாலையாக இயங்குகின்றது. தற்கால அல்புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட்டு மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் சிறந்த நிலையில் காணப்படுகின்றது என்பதனை பரீட்சை பெறுபேறுகள் எமக்கு கோடிட்டுக் காட்டுகின்றன.

75 வருட காலப்பகுதியில் எண்ணிலடங்கா கல்வி ரீதியான சாதனைகளை அறுவடை செய்துள்ள எமது பாடசாலை நிகழ்காலத்திலும் பல்வேறு கல்வி ரீதியான வெற்றிகளை ஈட்டி வீறுநடைப் போட்டுக் கொண்டிருக்கின்றது. பல்வேறு வசதிகளை மேம்படுத்தியதன் ஊடாக மாணவர்கள் தம்முடைய ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக் கொண்டு வருவதற்கான ஒரு களம் பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எமது பாடசாலையில் அமைந்துள்ள தொழில் ஆய்வு கூடமானது பல்வேறு தொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. அதுமட்டுமன்றி, கடந்த காலங்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிய பல்வேறு மாணவர்கள் தொழில் பயிற்சிகளை நிறைவு செய்து அவர்கள் தொழில் உலகுக்குள் செல்ல வழிகாட்டியுள்ளது என்பதனையும் ஆணித்தரமாக கூற முடியும்.

இவ்வாறு 75 வருட கால வரலாற்றைக் கொண்ட எமது பாடசாலை பல்வேறு வளர்ச்சிப்படிகளை தாண்டி தனது சாதனை பயணத்தினை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.



தகவலும் படமும்: எம்.சதுர்தீன் (JP)
(மாத்தளை சுழற்சி நிருபர்)





## அல்புர்கான் முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய அதிபரின் ஆசிச்செய்தி

கலேவெல, நகரின் கல்விச் சின்னமாய் ஒளி வீசும் அல் புர்கானின் 75 வருட நிறைவை முன்னிட்டு அதிபர் என்ற வகையில் ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதன் கல்விப்புலத்திலேயே தங்கியிருக்கிறது. அதனை மேம்படுத்தும் பாரிய பணியை ஒரு பாடசாலை தன்னிடம் சுமந்து கொள்கிறது. ஒரு பாடசாலையின் நோக்கம் வெறும் பாடப்பரப்புக்களுடன் சுருங்கிய கல்வியாகவன்றி ஒரு மனிதனின் வாழ்க்கையை செதுக்கும் கலாநிலையமாக இருக்க வேண்டும் என்பதே அடிப்படையாகும். இதனை நோக்காகக் கொண்டு பாடசாலைகள் தன்னுடைய செயற்பாடுகளை அமைத்து முன்னேறுவதே இன்றைய காலத்தின் தேவையாகும். கல்விரீதியாக மட்டுமன்றி ஆளுமை விருத்தியிலும் தலைமைத்துவப் பண்புகளை வழங்குவதுபோலவே நல்ல மனிதர்களை சமூகத்திற்கு பிரசுவிப்பதும் பாடசாலையின் அடிப்படையாக விளங்க வேண்டும். இதனைத்தான் பாடவிதானத்துடன் மட்டுமே இயங்குவதை விடுத்து இணைப் பாடவிதான செயற்பாடுகளை முன்னெடுப்பது முக்கியமாக நோக்கப்படுகிறது. ஒரு பாடசாலையின் விருத்தியிலும் முன்னேற்றத்திலும் அரசின் கரிசனையை எதிர்பார்ப்பதைவிடுத்து பாடசாலை சமூகம் அதனை சுமக்க வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கமும் சமூக ஆர்வலர்களும் பாடசாலையின் முன்னேற்றத்தில் பாரிய பங்களிப்பை செலுத்த வேண்டும். அதுபோலவே, எதிர்கால உலகிற்கு முகம் கொடுக்கும் மனிதர்களை உருவாக்கும் நோக்குடன் ஒரு பாடசாலையின் ஆசிரியர் குழுவும் தியாகத்துடன் சேவையாற்ற வேண்டியது அவசியமாகும். எனவே, எமது பாடசாலையில் முன்னேற்றமானது பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் இவ்வேளையில் இவ்வாறான நினைவு மலரொன்றை வெளியிடுகின்றமையும் முக்கிய அம்சமாகும். இதற்காகபாடுபடுகின்ற நூலாக்கக் குழுவினருக்கும் அதிபர் என்றவகையில் எனது நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றேன்.

**அஷ்ஷெய்க் டபிள்யூ.எம்.சமீர்** (நளீமி)
(BA, Attorney at Law
Dip in Eng,Dip in Cou ,Dip in Mass Media)
(அதிபர், அல் புர்கான் ம.வி)







TEACHERS
[illegible]










தகவல் உதவி: M.M. நுஸ்ரத்பானு
BA, LLB (R), ஆசிரியை, அல்புர்கான் மு.ம.வி.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் 'மலையகம் 200' நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)





சந்திரோதயம் கலை இலக்கிய பெரு மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் 'மலையகம் 200' எனும் மலையக மக்களின் பெருமையை பறைசாற்றும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

சந்திரோதயம் கலை இலக்கிய பெரு மன்றத்தின் தலைவர் எஸ். மணிசேகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக கலாநிதி உ.யுவநாதன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தின் பேராசிரியர் செ.யோகராசா அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதான உரையாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கலை இலக்கிய சமூக அரசியல் செயற்பாட்டாளருமான ம.திலகராஜ் கலந்துகொண்டிருந்ததுடன், இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்கள், மலையக மக்கள் சார்ந்த பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.



திருகோணமலையில் பெய்து வரும் அடைமழை காரணமாக துளசிபுரம் கிராம சேவகர் பிரிவின், ஜமாலியா லவ்லேன் 75 வீட்டுத்திட்டம் மற்றும் பள்ளத்தோட்டம், கேணியடி ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

(படம்: திருகோணமலை தினகரன் நிருபர்)

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் கடமையேற்பு



(நிந்தவூர் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நேற்று (18) நியமிக்கப்பட்டார். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, கிழக்கு மாகாண ஆளுநரினால் இவர் நியமிக்கப்பட்டு நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

## மட்டக்களப்பில் தொடர்மழை; தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



வடகீழ் பருவ பெயர்ச்சி மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதுஇவ்வாறிருக்க உரிய வடிகான் வசதி வாய்ப்புக்கள் இன்மையால் வெள்ளநீர் தேங்கியுள்ளதுடன் மக்கள் குடியிருப்புக்களிலும் உட்புகுந்துள்ளமையால் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மாவட்டத்திலுள்ள வெல்லாவெளிக்குளம், கோவில் போரதீவுக்குளம். பெரியபோரதீவுக் குளம், பழுகாமத்திலுள்ள குளங்கள், மகிழூர், குருமண்வெளி. குருக்கள்மடம், களுவாஞ்சிக்குடி, கதாவளை, உள்ளிட்ட பல இடங்களிலும் அமைந்துள்ள சிறிய குளங்கள் நிரம்பியுள்ளன. பெரிய குளங்களிலும் நீர்மட்டங்களும் வெகுவாக உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் நவகிரிக்கு குளத்தின் நீர்மட்டம் 31 அடி அக்குளத்தில் 2 வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் 17அடி 3 அங்குலம், உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 33அடி 3அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 15அடி 11அங்குலம், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 17அடி 1அங்குலம், கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் 11அடி 9அங்குலம், கித்துள்வெவக் குளத்தின் நீர்மட்டம் 7அடி, வெலிக்காக் கண்டிய குளத்தின் நீர்மட்டம் 12அடி 10 அங்குலம், புணாணை அணைக்கட்டின் நீர்மட்டம் 5அடி 5அங்குலமாகவும் அதிகரித்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் 2023.12.18 ஆம் திகதி காலை 6 மணிவரையிலிருந்து முற்பகல் 11.30 மணிவரை 24.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அதிகாரி சு. ரமேஸ் தெரிவித்துள்ளார்.

## இலங்கை தமிழரசுக் கட்சியின் 17ஆவது மாநாடு திருமலையில்



(றொட்டவெவ குறூப் நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் உயர்மட்டக் குழுக்கூட்டம் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளைப் பணிமனையில் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் நேற்று (18) நடைபெற்றது. இதன்போது எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு தொடர்பிலும் அதையொட்டி நடைபெறவுள்ள பொதுக் கூட்டம் தொடர்பில் கலந்துரையாப்பட்டது.

அத்துடன் மாநாடு தொடர்பான முன் ஆயத்தங்களைச் செய்வதற்கும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் எஸ். குகதாசன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஏற்பாட்டுக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, எஸ்.சிறீதரன், இ.சாணக்கியன், க.கலையரசன் தமிழரசுக் கட்சியின் பதில்.செயலாளர் மரு.ப. சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம், மூத்த துணைத் தலைவர் திரு.சி.வி.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் பொருளாளர் கனக சபாபதி, திருகோணமலை மாவட்டக்கிளைத் தலைவர் திரு.எஸ் குகதாசன், செயலாளர் திரு.க,செல்வராசா, துணைத்தலைவர் திரு.வி.விஜயகுமார், துணைச் செயலாளர் திரு.இ.இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர் காதர் மறைவுக்கு முசாரப் எம்.பி அனுதாபம்

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)



மருதமுனையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் பி.எம். எம்.ஏ.காதரின் மறைவு ஊடகத்துறைக்கும் மருதமுனை மண்ணுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மருதமுனை மண்ணை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மர்ஹூம் பி.எம்.எம்.ஏ. காதர் முழுக்கிழக்கு மாகாணத்தையும் தனது சொந்த ஊராகக் கருதி ஊடகப்பணி செய்த ஒருவராவார். ஒரு ஊடகவியலாளன் எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறே தனது வாழ் நாள் முழுவதும் மிக நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் ஊடகப்பணியை செய்திருக்கின்றார்.

மக்களின் தேவைப்பாடுகளையும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கன கச்சிதமாக ஊடகங்களில் வெளிக்கொண்டு வந்து அவற்றுக்கான தீர்வுகளை அதிகாரிகள் ஊடாக பெற்றுக்கொடுப்பதிலும் முதன்மையாகச் செயற்பட்ட ஒரு ஊடகவியலாளன் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகின்றேன்.

தனது ஊடகப்பணிக்காக பல தேசிய விருதுகளைப் பெற்றுக்கொண்டதுடன் மருதமுனை மண்ணுக்கும் பெருமையைத் தேடிக்கொடுத்த ஒரு திறமைசாலி என்பதில் நாமும் பெருமையடைந்திருக்கின்றோம். ஊடகத்துறையில் போட்டி பொறாமைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு எல்லோருடனும் அன்பாகவும்,பண்பாகவும் பழகி உறவாடிய நல்ல பண்பாளராகவும் மர்ஹூம் பி.எம்.எம்.ஏ.காதரைப் பார்க்கின்றேன்.

தான் எவ்வாறான கொள்கையோடும், செயற்பாடுகளோடும் இருந்தது போன்று தனது பிள்ளைகளையும் கல்விப்புலத்தில் ஆளாக்கி சமூகம் மதிக்கின்ற வகையிலும் வழிநடாத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவராகவும் சில வருடங்கள் கடமையாற்றி ஊடகவியலாளர்களின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்திருக்கின்றார்.

## "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்" 64 வது மேடை நிகழ்ச்சி

புதுவருடத்தை முன்னிட்டு மீண்டுமொரு இதமான இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் கவிக்கமல் , பாசில், இணைந்து வழங்கும் "அக்ஷரா" "வீனஸ்" இசைக்குழுவினர்களின் "இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், பவானி,கீதா, சான்,ஜெயமோகன், டாக்டர் ஜமீல்,கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் " இன்னிசை மாலை, எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறுகிறது.

இலக்கியங்களின் அடைக்கலம் புரவலர் ஹாசிம் உமர் தலைமை தாங்கி கலந்து சிறப்பிக்கும் இந்த இந்த இசைமேடையில், கொழும்பு நகரசபை உறுப்பினரும், சமூகசேவையாளருமான கலைஞர் ஜோசப் பெர்ண்ணான்டோ முன்னிலை வகிக்கிறார். K .A.A.S Marketing உரிமையாளர் தேசமான்ய தேசகீரத்தி வியாபார விபூசன ஜனாப் மௌசும் ஜிப்ரி பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்க இருக்கின்றார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் கலந்து கொள்கிறார்.

விஷேட அதிதியாக அமெரிக்காவின் உலக தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடத்தின் சர்வதேச தலைவர் டாக்டர் எஸ். எம். ரஸ்மி ரூமி, கொழும்பு பிரதிமேயர் எம் ரி எம் இக்பால் அதிதியாக கலந்து கொள்கிறார்.

இசைநிகழ்விற்கு சிறப்பதிகளாக தொழிலதிபர் ஜனாப் பீ. எம் ரமீஸ் மொஹமட், சமூக சேவையாளர் ஜனாப் ஹசன் முபாறக் , சமூக சேவையாளர் SH Colour house ஜனாப் சாஜஹான், கலைஞர் எம். என் நசார், தொழிலதிபர் எம் என் எம் ரபீக் சமூக சேவையாளர் யாசீன் அஹமட் , சமூக சேவையாளர் கொழும்பு நகரசபை உறுப்பினர் எம். பி சுதர்சன் , டச் என் டச் சேதுராஜா , சமுகசேவையாளர் சமன்குமார், வசந்தம் எப். எம். முகாமையாளர் லெட்சுமணன் கிருபாகரன். கலந்து கொள்கிறார்கள். அதிதிகளாக மக்கள் நலன் சம்மேளன தவிசாளர் ஜனாப் அஸீஸ் லக்கானா, கலைஞர் ஏ ரவீந்திரன், தொழிலதிபர் ஏ எல் எம் உவைஸ், திருமதி கௌசலாதேவி கோவிந்தபிள்ளை, கவிஞர் திலகம் பிரேமராஜ், தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், தேசமான்ய குருசாமி பிச்சைக்கிருஷ்ணா, குருசாமி புவனேஸ்வரன், கலைஞர் சண்மு, ஓவியநாதன், ஜனாப் எஸ். எம். வாஜிட் அலி, தங்கவேல் யோகராஜன், கலைஞர் அஸீம்தீன், கவிஞர் தனபாலன் , கவிஞர் கலாநிதி ஜனாப் அப்துல் அஸீஸ், மற்றும் தெகிவளை நகரசபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா கலந்து கொள்கிறார்கள்.




## சிரேஷ்ட ஊடகவியலாளர் காதர் மறைவுக்கு கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை அனுதாபம்

நாடறிந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் மருதமுனை பி.எம்.எம்.ஏ. காதரின் மரணம் அவரைத் தெரிந்த அவரோடு நட்பு கொண்டவர்களை மட்டுமன்றி, ஈழத்து இலக்கிய வாதிகள் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களையும் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளதாக கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவர் ஓய்வு நிலை பேராசிரியர், மௌலவி எம். எஸ்.எம். ஜலாலுதீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அன்பு சகோதரர் காதர் தான் வாழ்ந்த மண்ணையும் தமது மக்களையும் மட்டுமன்றி, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் மிகவும் நேசித்த ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.

சிறந்த குணவொழுக்கம், மனித நேயம், சிறந்த பண்புகள் கொண்ட காதரின் மரணத்திற்காக எமது பேரவை சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பம், பிள்ளைகள் அனைவருக்கும் பொறுமையை வழங்கவும், மர்ஹும் காதரின் மறுமை வெற்றிக்கும் துஆ செய்கிறோம்.

## கிளிநொச்சியில் வாழும் அமெரிக்க விவசாய தம்பதிகள்

# விவசாயம் தொடர்பில் தமது அனுபவங்களை பகிர்கின்றனர்

'ஊரோடு வாழ்வும் மண்ணின் வளமும்' நாட்டின் பொருளாதாரத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இதுதொடர்பில் விவசாய தம்பதிகளான

இரத்தினம் கஜேந்திரகுமார் (கண்ணன்) நீண்ட காலமாக அமெரிக்காவில் கணினி தொழில் நுட்பவியலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அவரது மனைவி திருமதி ரதி மலர் (ரதி) ஆகிய இருவரும் கிளிநொச்சியில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். சமகால விவாசயம் தொடர்பில் இருவரும் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**நீங்களும் மனைவியுமாக அமெரிக்காவில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து விவசாயிகளாக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள். இந்த தீர்மானத்தை எடுத்தமைக்கான காரணம் என்ன?**

வயல் வெளியும் அதைச் சார்ந்த இடங்களும்தான் எங்களை 30 வருடங்களுக்கு முன் இணைத்து வைத்தது. நாங்கள் இருவரும் எப்பொழுதும்இயற்கையைநேசிப்பவர்கள்.நாங்கள் வெளிநாடுகளில் இருக்கும் போது அதாவது ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உஷ்ண காலங்களில் நாங்கள் வீட்டுத் தோட்டம் செய்வோம். எங்களுக்குத் தேவையான மரக்கறி வகைகளை நாங்களே செய்து சாப்பிடுவோம். இது எங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

இயற்கையை நேசிக்கும் எமக்கு எல்லா வளங்களும் உள்ள இந்த மண்ணில் வந்து மீண்டும் காலடி பதிக்க வேண்டும் என்பது எங்களுடைய நீண்ட கால விருப்பம். அதன்படி எங்கள் பிள்ளைகளும் எங்களுக்கு ஒத்துழைத்தார்கள். அதனால் நாங்கள் அமெரிக்காவில் இருந்து ஓய்வு பெற்று விட்டு இங்கு வந்திருக்கின்றோம்.

ஆனால் இதுதான் எங்களுடைய முழு நேரப் பணி என்று சொல்ல முடியாது. ஆனால் எங்களுக்கு விவசாயம் என்பது விருப்பமான துறை. அதிலும் முக்கியமாக சேதனப் பசளை விவசாயப் பயிர்ச் செய்கையினையே மேற்கொள்கின்றோம்.

இயலுமானவரை இரசாயனங்களையும், செயற்கை உரங்களையும் தவிர்ப்பதற்கான முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். அதற்கான வழிகளை இப்பொழுது ஆரம்பித்திருக்கின்றோம். எங்களுக்கு மிகவும் முக்கியமாக வன்னி மக்களை மிகவும் பிடிக்கும். அவர்களுடன் சேர்ந்து சமூக சேவை செய்ய வேண்டும் என்றும் சின்ன ஆசையும் இருந்தன. அதுவும் கைகூடி வந்துள்ளது. இது நான் பிறந்த மண். இதில் என்னதான் இருந்தாலும் நாங்கள்தான் முயற்சி எடுத்து எல்லாவற்றையும் முன் கொண்டு வர வேண்டும்.

பல விதமான குற்றம் குறைகளை மக்கள் கூறினாலும் அவற்றை உருவாக்கிய நாங்கள்தான் என்பதை நாங்கள் மறக்க முடியாது. இங்கு வந்து இங்குள்ள விவசாயிகளுடன் எங்களால் முடியுமானவற்றை நாங்கள் செய்யலாம் என்று இருக்கின்றோம்.

**இளைய சமூகம் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான சில முன்மாதிரி விடயங்களைக் கூற முடியுமா?**

நாங்கள் நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதுதான் இதற்கான அடிப்படை பதிலாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இப்பொழுது எல்லா இளைஞர்களிடத்திலும் ஸ்மாட் போன் இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். தொழில் நுட்பத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என்று சொல்லா விட்டாலும் அதை அவர்கள் பாவிக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அந்தவகையில் விவசாயத்துறை சார்ந்த தொழில் நுட்பங்களையும் உள் நுழைப்பார்களாக இருந்தால் அவர்களுடைய பிள்ளைகள் கூட தொடர்ந்து செய்ய வேண்டும். அது தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இலாபத்தை ஈட்ட முடியும் என்று காட்டுவார்களாக இருந்தால் அந்த பிள்ளைகள் கூட இதனை செய்வதற்கு முன்வரலாம் என நான் கருதுகின்றேன்.

இதில் வந்து விவசாய உற்பத்தி என்று சொல்வதை விட அவர்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதை கருத்திற் கொள்ள வேண்டும். சந்தைப்படுத்தலை பல தொழில் நுட்ப வடிவங்களில் கொண்டு வரலாம். முகநூல் வாயிலாகவும் வேறு வழிகளாகவும் தங்களுடைய பொருட்களுக்கு சரியான விலைகளைக் காட்சிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

| காணி துண்டு இலக்கம் | : | 157/159 |
| அளவு | : | 0.4133 |

மேலதிக விபரங்களுக்கு மேலே இலக்கத்தை உடைய வர்த்தமானியை பார்க்கவும்

**பிரதேச செயலாளர்**
**ரிதீமாலியத்த**

2023 நவம்பர் மாதம் 30ம் திகதி
**ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தில்.**

## அறிவித்தல்

2023 நவம்பர் 24ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் "சொப்ட் லொஜிக் இன்வெஸ்ட் மெண்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ஆனது அதனது பெயரை" சொப்ட் லொஜிக் ஐரி (IT) ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என மாற்றியள்ளதென 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**கம்பனியின் முன்னைய பெயர் :** சொப்ட்லொஜிக் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனி இலக்கம் :** பிவி 00275818

**பதிவு அலுவலகம் :** இல. 14, டி பொன்சேக்கா பிரதேசம், கொழும்பு - 05

**கம்பனியின் புதிய பெயர் :** சொப்ட்லொஜிக் IT ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**சொப்ட்லொஜிக் கோப்பரேட் சேர்விஸஸ் (பீவீடீ) எல்டிடீ**
**செயலாளர்,**
**இல. 14,டி பொன்சேக்கா பிரதேசம், கொழும்பு - 05**

## காணி எடுத்தற் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் (460ஆம் அத்தியாயம்)

காலி மாவட்டத்தின் கோணபீனுவல பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் மொஹமட் முக்தார் மொஹமட் ஷர்பாஸ் ஆகிய என்னால் காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 33ஆம் பிரிவின் கீழ் பின்வரும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரிக்கப்படுகின்ற காணியினை எடுத்துக் கொள்வதற்காக உரிய நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக நட்டஈட்டுத் தொகையான ரூபா ஆயிரம் (ரூபா 1000/-) தொகையினை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக பத்தேகம மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் LA/245 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் மூலம் அறிவித்துக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 2354/10 மற்றும் 2023 அக்டோபர் 17 திகதியிட்டது திகதிய அரசின் விஷேட வர்த்தமானிப் பத்திரிகையினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| பிரதேச செயலாளர் | : | கோணபீனுவல |
| காணியின் பெயர் | : | அலபலாவத்த |
| அடிப்படை நிலத்துண்டு இலக்கம் | : | கா 3878 |
| நிலத்துண்டு இலக்கம் | : | 01 |
| நிலத்துண்டுகளின் எண்ணிக்கை | : | 01 |
| அளவு | : | 0.0023 (ஹெக்டயார்) காணி அமைந்துள்ள |
| கிராமம்/கிராமங்கள் | : | கோணபீனுவல கிராமம்/ (60B கோணபீனுவல மத்திய கிராம சேவகப் பிரிவு) |

**அமைவு**

| | | |
|---|---|---|
| **வடக்கே** | : | கே.ஜீ. டியூடர் என்பவர் உரிமை கோருகின்ற அலபலாவத்த மற்றும் மார்க்கம் |
| **கிழக்கே** | : | மார்க்கம் மற்றும் மார்க்கங்கள் (வீ.அபி.அதி.சபை) |
| **தெற்கே** | : | மார்க்கங்கள் (வீ.அபி.அதி.சபை) மற்றும் நிலத்துண்டு இலக்கம் 02 |
| **மேற்கே** | : | நிலத்துண்டு இலக்கம் 02, ஸிரில் திஸநாயக்க மற்றும் கே.ஜீ. டியூடர் என்பவர் உரிமை கோருகின்ற அலபலாவத்த |

**அமைவு**

போன்ற எல்லைகளை உள்ளடக்கி அமையப் பெற்றுள்ள அளவில் ஏக்கர் ... ரூட்... பர்சஸ் 0.9 (ஹெக் 0.0023) ஆன, நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அ.நி.இ. கா. 3878 மற்றும் 2011.03.31ஆம் திகதிய அடிப்படை நிலத்துண்டு இலக்மக் 01 என குறிப்பிடப்பட்டுள்ள அலபலாவத்த எனப்படுகின்ற கோணபீனுவல கிராமத்தில் (60B கோணபீனுவல மத்திய கிராம சேவகப் பிரிவு) அமையப் பெற்றுள்ள குடியரசிற்குச் சொந்தமான காணியின் தொகுதி ஆகும்.

**எம்.எம்.எம். ஷர்பாஸ்**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**கோணபீனுவல.**

**கோணபீனுவல பிரதேச செயலாளர் பிரிவு,**
**2023.11.09ஆம் திகதி**
**கோணபீனுவல பிரதேச செயலாளர்**
**அலுவலகத்தில் இருந்து.**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல : DIVPW/LND/TANKD/LA/6/02 (பழைய கோவை இல.3/2/2/100) சுற்றுலாத்துறை

மற்றும் காணி அமைச்சின் இல: 4-3/12/2013/ED/631

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியினை கைவிடப்பட்டுள்ள வாவி அணைக்கட்டு கட்டுதல் மற்றும் வான் அமைப் பதற்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2354/26 ஆம் இலக்க 2023.10.20 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் III பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | வடமேல் |
| மாவட்டம் | : | குருணாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | பண்டுவஸ்நுவர மேற்கு |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இல 1326 - கஹட்டவில |
| கிராமம் | : | கிரிமெட்டியாகம |
| வரைபட இல | : | இ.கி.வ.1800பிற்சேர்க்கை இல 10 தாள் இல.10 |
| துண்டு இல | : | 276 |
| விஸ்தீரணம் | : | 0.5221 ஹெக்டயார் (ஏக்கர்1 ரூட்1 பர்ச்சஸ் 6.4) |
| காணியின் பெயர் | : | மஹவெவகாவஹேன்யாய |

**ஐ.பி.என்.பி. திலகரத்ன**
**பிரதேச செயலாளர்**
**பண்டுவஸ்நுவர மேற்கு**

**2023.11.27ஆம் திகதிய**
**பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகம்**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல: KDS/AKU/4/2/60**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின்**
**குறிப்பு இலக்கம்: 4-3/12/2018/WS/297**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 2023.11.18ஆந் திகதிய இலக்கம் 2358/79ஐக் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (iii)ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : | கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | அக்குரணை |
| கிராம அலுவலர் பிரிவு | : | பலகடுவ (இல. 585) |
| கிராமத்தின் பெயர் | : | பலகடுவ |
| காணியின் பெயர் | : | சைன்ஸ்டன்வத்த |
| அடிப்படை வரைபட இலக்கம் | : | கா.சி 320672 |
| காணி துண்டு இலக்கம் | : | 1 மற்றும் |
| விஸ்தீரணம் | : | 0.0372 ஹெக்டெயர் |

**ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**அக்குரணை**

2023.11.23ஆந் திகதி
**அக்குரணை பிரதேச செயலகத்தில்.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7(1)ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் கமநல சேவை பராமரிப்புக்காக காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளவுள்ளதால் இது சம்பந்தமான காணி எடுத்தற் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான உரிமை குறித்த 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 2347/04 மற்றும் 2023.08.28ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டள்ளது.

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | வடமேல் |
| மாவட்டம் | : | குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | கொபய்கனே |
| கிராம சேவையாளர் பிரிவு | : | 1318 பொரளுவெவ |
| கிராமம் | : | வெலிபிட்டிய |
| கடத்திரள் வரைவு இலக்கம் | : | க.வ.இ. 420716 |
| துண்டு இலக்கம் | : | 1 |
| பத்திர இலக்கம் | : | 1 |
| குறிப்பு இலக்கம் | : | எனது இல. DIVKB/LND/LA/AGRAQ/10 இலு. 4-3/9/2019/A/192 |

மேலதிக தகவல்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட விஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**டப். திலினி நிஸன்சலா சில்வா**
**பிரதேச செயலகப்பிரிவு**
**கொபெய்கனே.**
2023.11.13

**எனது இலக்கம்:**
**RUWA/LAN/ACQTN/A2/258**
**பிரதேச செயலகம், ருவன்வெல்ல**

2023.10.11

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசுக்கு சுவீகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களிற்காக தயவு செய்து 2023.09.18ஆம் திகதிய 2350/15ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் (III)ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. பிரதேச செயலகப் பிரிவு | : | ருவன்வெல்ல |
| 2. கிராமம் | : | வஹரக்க |
| 3. அமைவிடம் | : | இலக்கம் 101 வஹரக்க கிராம அலுவலர் பிரிவு |
| 4. ஆரம்ப வரைபட இலக்கம் | : | ஆ.வ.ப. கே. 3847 |
| 5. காணித் துண்டு இலக்கம் | : | 01 - 04 |

**எம்.டி.எஸ்.என். ஹெட்டிகே**
**பிரதேச செயலாளர்/ சுவீகரிப்பு உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்,**
**ருவன்லெல்ல.**

## திருத்தம் காணி கையகப்படுத்தும் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம். EP/LD/9/2/24**
**காணி அமைச்சு இலக்கம் 03J/91/D/21**

கீழே விவரிக்கப்பட்டுள்ள காணி பொது பணிக்காக அரசாங்கத்திற்கு கையகப் படுத்த எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2350/46ஆம் இலக்கம் கொண்ட 2023.09.21 தேதியிட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. மாகாணம் | - | தெற்கு |
| 2. மாவட்டம் | - | காலி |
| 3. பிரதேச செயலகப் பிரிவு | - | எல்பிட்டி |
| 4. கிராம உத்தியோகத்தர் பிரவு | - | 26பி இகல தலாவ |
| 5. ஊரின் பெயர் | - | இகல |
| 6. வரைபட எண் | - | அ.வ.கா. 2981 |
| 7. காணித்துண்டு எண் | - | காணித்துண்டு எண் 1 தொடக் கம் 5 வரை |
| 8. அளவு | - | 2.023 ஹெங்டெயர் |

**சதுரங்க குணசேகர**
**பிரதேச செயலாளர்**
**எல்பிட்டி.**
2023 கார்த்திகை மாதம் 21ஆம் திகதி
**எல்பிட்டி பிரதேச செயலகத்திலிருந்து**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் பொது நோக்கத்திற்காக தேவைப்படும் பின்வரும் நிலங்கள் தொடர்பான மேற்படி சட்டத்தின் பிரிவு 7ன் விசாரணைக்கு அழைப்பு விடுக்கும் அறிவிப்பு ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**எமது குறிப்பு**
**இல: KHDS/LND/03/ACO/VIL/05-1**

எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் அல்லது ஆட்சி உரிமையின் விபரம்.

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | சபரகமுவ |
| மாவட்டம் | : | இரத்தினபுரி |
| பிரதேச செயலகம் | : | கஹவத்தை |
| கிராம சேவகர் பிரிவு | : | யடாகர |
| கிராமம் | : | யடாகர |
| வரைபட இல. | : | துண்டு இல. 27 மேலதிக இல. 17 மற்றும் பத்திரம் இல. 20 |
| துண்டு இல. | : | 309, 311 |
| கிராமத்தின் பெயர் | : | எடவனஹேன, திப்பொல ஹேன, கதுருபெஹேன கிரிமடுவேஹேன |
| அளவு | : | ஹெக்டேயார் 09.949 |

**பீ.எல்.ஜி. ருவன்சிரி**
**பிரதேச செயலாளர்**
**கஹவத்தை**

**2023ம் வருடம் நவம்பர் மாதம் 01ம் திகதி**
**கஹவத்தை பிரதேச செயலாளர் அலுவலகம்.**

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

## NSB கேள்வி அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கி

### தேசிய சேமிப்பு வங்கி தலைமை அலுவலகத்தில் உள்ள தீப் பாதுகாப்பு முறைமையின் திருத்தவேலைகள் / மேம்படுத்தல்கள்

தேசிய சேமிப்பு வங்கி தலைமை அலுவலகத்தில் உள்ள தீப்பாதுகாப்பு முறைமையின் திருத்தவேலைகள் / மேம்படுத்தல்களுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டுவர்த்தக பெறுகைக் குழுவின் (சிறியளவு) தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) தீயைக் கண்டறிதல், தீ பாதுகாப்பு மற்றும் தீயை அணைத்தலுக்காக EM4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபாவை (ரூபா 3,000.00) ரொக்கப் பணமாக செலுத்தியும் மற்றும் நாளது தரவேற்றம் செய்யப்பட்ட CIDA பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்ததன் பின் 2023-12-20ஆம் திகதி முதல் 2024-01-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் தேசிய சேமிப்பு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்) அவர்களின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விக்கான தகுதியாக ஒப்பந்தக்காரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- இதனையொத்த அளவு மற்றும் தன்மையைக் கொண்ட தீ முறைமை நிறுவல்களின் திருத்தவேலைகள் / மேம்பாடுகளில் குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தில் அனுபவம் அல்லது கடந்த 7 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரராக கேள்வியில் குறிப்பிடப்பட்ட மதிப்பை விட குறையாத திருத்தவேலை திட்டம். வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணச் சாட்சிகளை இணைத்தல் வேண்டும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட எந்தவொரு முற்பணம் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகள் இல்லாத திரவச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் 5 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை முடிவுறுத்தல் திகதியான 2024-01-31ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்குமுன் கிடைக்கும் வகையில் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தேசிய சேமிப்பு வங்கி தலைமை அலுவலகத்தில் உள்ள தீப் பாதுகாப்பு முறைமையின் திருத்தவேலைகள் / மேம்படுத்தல்கள்" எனக் குறிப்பிட்டு உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்), வளாகப் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட முகவரியில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் தேவையானால், 011-2573928 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தேசிய சேமிப்பு வங்கியின் உதவிப்பொது முகாமையாளர் (பொறியியல்) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**கூட்டுவர்த்தக பெறுகைக் குழு (சிறியளவு),**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**255, காலி வீதி,**
**கொழும்பு-03.**
**2023-12-12.**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு 10

### இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு எல்.பீ. எரிவாயு வழங்கல்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைக்காக கீழுள்ள உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | அளவு |
|---|---|
| • எல்.பீ. எரிவாயு 37.5Kg | 1500 |
| • எல்.பீ. எரிவாயு 12.5Kg | 50 |

மேலுள்ள வழங்கலுக்காக தகுதியுடைய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதோடு எல்.பீ. எரிவாயுவுக்காக மீளளிக்கப்படாத ரூபா 8,500.00 வைப்பு ஒன்றை இலங்கை தேசிய வைத்தியசாலை சிறாப்பர் பிரிவுக்கு செலுத்திய பின் 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.01.09 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இருந்து குறித்த விலைமனு நிபந்தனைகளைக் கொண்ட விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

2024.01.10 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் தலைமை கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**டொக்டர் டபிள்யு.கே. விக்ரமசிங்க,**
**தலைவர்,**
**தேசிய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2023ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு -05.**
2023ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14ஆம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா 1814.51 |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023 நவம்பர் 21 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டீ.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.10.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 150 இன் பேரில் கண்டி, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை இல. 640/09 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. டொன் சந்ரசேகர அமரசிங்ஹ அல்லது அமரசிங்ஹ ஆரச்சிகே டொன் சந்ரசேகர அமரசிங்ஹ, கண்டி, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை இல. 640/09 எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஜயசிங்ஹ ஆரச்சிகே மங்கலிகா ஜயசிங்ஹ மற்றும் கண்டி, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை இல. 640/09 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. அமரசிங்ஹ ஆரச்சிகே நுவன் புபுது அமரசிங்ஹ ஆகியோரிடமிருந்து மீள் அட்டவணைக் கடன் வசதி A மீது 2023.08.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 107,281,782.62 (நூற்று ஏழு மில்லியன் இருநூற்று எண்பத்தொரு ஆயிரத்து எழுநூற்று எண்பத்திரெண்டு ரூபாய் அறுபத்திரெண்டு சதமும்) அத்துடன் ரூ.63,092,632.00 (அறுபத்து மூன்று மில்லியன் தொண்ணூற்றிரண்டு ஆயிரத்து அறுநூற்று முப்பத்திரெண்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்திரெண்டு தசம் ஏழு (22.7%) வீதத்தில் 2023.08.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மீள் அட்டவணைக் கடன் B மீது 2023.08.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 4,823,191.79 (நான்கு மில்லியன் எண்ணூற்று இருபத்து மூன்று ஆயிரத்து நூற்று தொண்ணூற்றொரு ரூபாய் எழுபத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 3,750,512.98 (மூன்று மில்லியன் எழுநூற்று ஐம்பது ஆயிரத்து ஐந்நூற்று பன்னிரெண்டு ரூபாய் தொண்ணூற்றெட்டு சதம்) மீது ஆண்டுக்கு ஆறு (6%) வீதத்தில் 2023.08.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி மேலும் வட்டியும் தவணைக்கடன் மீது 2023.08.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 13,414,672.02 (பதின்மூன்று மில்லியன் நானூற்றுப் பதிநான்கு ஆயிரத்து அறுநூற்று எழுபத்திரெண்டு ரூபாய் இரண்டு சதமும்) அத்துடன் ரூ. 8,234,348.21 (எட்டு மில்லியன் இருநூற்று முப்பத்து நான்கு ஆயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு ரூபாய் இருபத்தொரு சதம்) மீது ஆண்டுக்கு இருபத்திரெண்டு தசம் ஏழு (22.7%) வீதத்தில் 2023.08.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டீ.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.10.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 150 இன் பேரில் மீள் அட்டவணைக் கடன் வசதி A மீது ரூ.107,281,782.62 (நூற்று ஏழு மில்லியன் இருநூற்று எண்பத்தொரு ஆயிரத்து எழுநூற்று எண்பத்திரெண்டு ரூபாய் அறுபத்திரெண்டு சதமும்) மீள் அட்டவணைக் கடன் B மீது ரூ.4,823,191.79 (நான்கு மில்லியன் எண்ணூற்று இருபத்து மூன்று ஆயிரத்து நூற்று தொண்ணூற்றொரு ரூபாய் எழுபத்தொன்பது சதமும்) தவணைக்கடன் மீது ரூ. 13,414,672.02 (பதின்மூன்று மில்லியன் நானூற்றுப் பதிநான்கு ஆயிரத்து அறுநூற்று எழுபத்திரெண்டு ரூபாய் இரண்டு சதமும்) அத்துடன் 2023.08.08 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் விடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் முதலாவது அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பகமூனக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

1. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல.2 வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01 வடக்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு 03உம், கிழக்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு 2உம், தெற்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி2உம், மேற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் வரி மதிப்பு இல. 652/2 ஐக் கொண்ட நிலமனையும், எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1 பே.3) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் எட்டு ஏழு ஆறு (ஹெக்.0.10876) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 588/35இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல.2 வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 02 வடக்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி3உம், கிழக்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை வரி மதிப்பு இல. 664 மற்றும் 664/1 ஐக் கொண்ட நிலமனைகளும், தெற்கில் வரைபடம் இல.919 இல் x-y-z-என அடையாளமிட்ட ஓட்டுப் பாதையும் z-z1 15 அடி அகல வழிப் பாதையும், மேற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காமாவத்தையில் வரி மதிப்பு இல. 652/2 ஐக் கொண்ட நிலமனையும், வரைபடம் இல. 4952இல் காணித்துண்டு இல. 1உம் எல்லைகளாகக் கொண்டு எட்டு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0 பே.8) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு பூச்சியம் இரண்டு (ஹெக்.0.0202) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 660/115இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 03 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 03 வடக்கில் மாபல் குரெ மாவத்தையும், கிழக்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை வரி மதிப்பு இல. 642/1 ஐக் கொண்ட நிலமனையும், தெற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை வரி மதிப்பு இல. 664 மற்றும் 644/1 ஐக் கொண்ட நிலமனைகளும், மேற்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு 2 உம் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி 3உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஒன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 660/115 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் பேராதனை வீதியில் தற்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 1980 ஆகஸ்ட் 14 திகதியிட்ட வரைபடம் இல. 919இல் z-y-z-z1 என எல்லை நிர்ணயித்த 15 அடி அகல பிரவேசப் பாதை மேற்கூறிய வடக்கில் வரைபடத்தில் காணித்துண்டு பி1 மற்றும் பி2 மற்றும் காணித்துண்டு சீயும், கிழக்கில் வரி மதிப்பு இல. 664ஐக் கொண்ட நிலமனையும் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு பி 2 மற்றும் காணித்துண்டு சீயும், தெற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு சீ மற்றும் காணித்துண்டு பி 2உம், மேற்கில் காணித்துண்டு சீ மற்றும் பி 2 உம் எல்லைகளாகக் கொண்டு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0 பே.24.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 452/130 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.கே.எஸ்.எஸ்.கே. கமகே**
**கிளை முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**பகமூனக் கிளை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**

---

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
### நகர அபிவிருத்தி அதிகாரசபை

# அறிவித்தல்

**மாதாந்த அடிப்படையில் 5 வருட கால எல்லைக்கு முதலில் வருபவர்களுக்கு முதலில் வழங்கல் அடிப்படையில் கொழும்பு-11, கொழும்பு கோல்ட் சென்ரறில் 15 எண்ணிக்கையான வெற்றிடமாகவுள்ள கடைகள் மற்றும் உணவகத்தை ஒதுக்கீடு செய்தல்**

2023.12.18 ஆம் திகதியிலிருந்து முதலில் வருபவர்களுக்கு முதலில் வழங்கல் அடிப்படையில் 05 (ஐந்து) வருட கால எல்லைக்கு கொழும்பு-11, என்.ஏச்.எம். அப்துல் காதர் மாவத்தையின் 180 ஆம் இலக்கத்திலுள்ள கொழும்பு கோல்ட் சென்ரறிலுள்ள (முன்னைய மீன் கடைக் கட்டிடம்) வெற்றிடமாகவுள்ள கடைகளை ஒதுக்கீடு செய்வதற்காக ஆர்வமுள்ள சாரர்களினால் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையானது அழைக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு, பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவை பின்வரும் வழிகளினூடாக பார்வையிடவும்.

**தொலைபேசி இலக்கம்** : 011-2875921, 011-3611950, 011-2875916-20
**நீடிப்பு** : 2960-2968 **மின்னஞ்சல்** : **directorred@uda.gov.lk**
**தொலைநகல்** : 011-2875900 **இணையதொடர்பு** : **https://www.uda.gov.lk/procurement-notice.html**

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

---

### கைத்தொழில் அமைச்சு
### நிறுவனப் பதிவாளர் திணைக்களம்

# கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் வருடாந்தம் தாக்கல் செய்ய வேண்டிய ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய காலத்தை நீடித்தல்

நிறுவனப் பதிவாளர் திணைக்களத்தின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களில் சில வருடாந்தம் தாக்கல் செய்ய வேண்டிய ஆண்டு அறிக்கை (இலக்கம் 15/15 A படிவம்) தாக்கல் செய்வதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கூட்டிணைக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களும் நிறுவனச் சட்டத்தின் 133(1) பிரிவின் கீழ் வருடாந்த பொதுக் குழுக் கூட்டத்தை நடத்தி ஆண்டு அறிக்கையை (இலக்கம் 15/15A படிவம் மூலம்) 30 வேலை நாட்களுக்குள் நிறுவன பதிவாளர் நாயகத்திற்கு குறித்த கட்டணத்தை செலுத்தி ஒப்படைத்தல் வேண்டும். வருடாந்த கூட்டம் ஒன்றை நடத்தாவிட்டால் நிறுவனச் சட்டத்தின் 144(3) பிரிவுக்கு அமைய செயற்பட்டு 30 வேலை நாட்களுக்குள் ஆண்டு அறிக்கையை நிறுவன பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன்படி இதுவரை ஆண்டு அறிக்கையை தாக்கல் செய்யாத நிறுவனங்களுக்காக 2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2024 மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை சலுகைக் காலம் ஒன்று வழங்கப்படுவதோடு அந்தக் காலத்திற்காக தீர்வுப் பணம் அறவிடப்படாது.

அதனால் நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு, செயலாளர்களுக்கு, ஊக்குவிப்பாளர்களுக்கு மற்றும் ஆர்வம் காட்டுகின்ற ஏனைய தரப்புகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆண்டு அறிக்கையை தாக்கல் செய்வதற்கு வகை செய்யும்படி இத்தால் தயவுடன் அறியத்தரப்படுகிறது.

**சஞ்சீவ திசாநாயக்க**
**நிறுவன பதிவாளர் நாயகம்**

---

# பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு

### ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனம் மாளிகாவத்தை, கொழும்பு – 10

## Fully Automated Haematology Analyzer
## ஒன்றை கொள்வனவு செய்தல்

மாளிகாவத்தை, ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அதற்கான தகைமைகளையுடைய இலங்கையில் விற்பனை செய்யும் வியாபார பதிவுடனான கம்பனிகளிடமிருந்து 2024.01.08 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 01 | Fully Automated Haematology Analyzer ஒன்று கொள்வனவு செய்தல் | 01 | ரூ.2,500.00 |

01. கேள்வி ஆவணங்களை 2023.12.19 முதல் 2024.01.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.3.00 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - (அ) பெறுகைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்தல்
   - (ஆ) ஒரு கேள்வி ஆவணத்திற்காக ரூ.2500.00 குறித்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிலையத்தின் காசாளர் பிரிவிற்கு காசாக பற்றுச்சீட்டை செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - (இ) வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட போட்டோப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - (உ) தமது உற்பத்தி மற்றும் உள்ளூர் முகவராக நியமித்து பிரதானியினால் விநியோகிக்கப்படும் சான்றிதழை/கடிதத்தைச் சமர்ப்பித்தல்
02. கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre-Bid Meeting) 2023.12.29 ஆம் திகதி மு.ப.10.00 இற்கு இந்நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்
03. கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் கட்டணங்கள் இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக 2024.01.08 பி.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இந்நிறுவனத்தின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகை உள்ளிடும் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அதாவது, 2024.01.08 மு.ப.10.00 இற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நிறுவனம்**
**மாளிகாவத்தை, கொழும்பு - 10.**

**தொ.பே - 011-2422335/0112422336**
**பெக்ஸ் - 011-2422334**

---

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இலக்கம்: 77542305 மற்றும் 88255554

இல.191, பிரதான வீதி, கிரியுல்ல என்ற முகவரியைச் சேர்ந்த ஜயசிங்க ஆரச்சிகே பிரசன்ன சம்பத் ஜயசிங்க என அறியப்படும் திரு. ஜயசிங்க ஆரச்சிகே பிரசன்ன சம்பத் என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.27 ஆம் திகதிய 2356 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.20ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2024.01.10ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

"மல்வான" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் L.W.I ஜயசேகர தயாரித்த 2012.08.28ஆம் திகதிய 912/2012 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று, உடுகஹ மேற்கு கோரளை, நாரம்மல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட 1034 மரங்தகொல்ல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தலகஸ்முனுவ கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடகிழக்கில் V.G குமாரசிறி என்பவரால் உரிமை கோரப்படும் காணி, நீர்கொழும்பு வீதியிலிருந்து தல்கஸ்முனுவ வரையான பிரதேச சபை வீதி என்பவற்றையும் தென்கிழக்கில் V.G குமாரசிறி, அலவ்வ, ரணவீர, P.V. ஆரியதாஸ, தினபால ஆகியோரால் உரிமை கோரப்படும் காணி, தேவத்த வீதி என்பவற்றையும் தென்மேற்கில் V.G குமாரசிறி என்பவரால் உரிமை கோரப்படும் காணி, மஹா ஓயா என்பவற்றையும் மேற்கில் 303/2010 என்ற வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 01, இக்காணியின் மீதிப் பாகம், சம்பத் ஜயசிங்க என்பவரால் உரிமை கோரப்படும் காணி, தியஹொந்த எல என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் மூன்று ரூட்கள் ஐந்து பேர்ச்சுகள் (ஏ1.ரூ3.பே.05) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி நாரம்மல காணிப் பதிவகத்தில் T66/41 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் தம்பதெனிய கிளை முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் -037- 2266144"

மேற்குறிப்பிட்ட அட்டவணை வரிசை முறையில் உள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. பெறுமதிசேர் வரிக் (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

**இலங்கை வங்கி**
**தம்பதெனியக் கிளை**

**திரு. K.N.M.D.P தர்மகீர்த்தி**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.06.07 திகதியிட்ட ஈட்டுமுறி இல.390,391,392 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஆர்.வீ.அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2022.01.19 திகதியிட்ட ஈட்டு முறி இல.4825 ஆகியவற்றின் பேரில் லீமாகஹகொட்டுவ, பூவளிகட இல. 162/ஏ. எனும் முகவரியைச் சேர்ந்த திரு.எம்.ஆர்.எம். ரிபாஸ் என்பவரிடமிருந்து மீள் அட்டவணைக் கடன் A மீது 2023.09.09 வரை முதலும் வட்டியும் ரூ.29,695,699.38 (இருபத்தொன்பது மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றைந்து ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்றொன்பது ரூபாய் முப்பத்தெட்டு சதம்) அத்துடன் ரூ.25,000,000.00 (இருபத்தைந்து மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதிநான்கு தசம் இரண்டு ஐந்து (14.25%) வீதத்தில் 2023.09.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் மீள் அட்டவணைக் கடன் B மீது 2023.09.09 வரை முதலும் வட்டியும் ரூ.5,969,495.03 (ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ஆயிரத்து நானூற்று தொண்ணூற்றைந்து ரூபாய் மூன்று சதம்) அத்துடன் ரூ.5,716,974.44 (ஐந்து மில்லியன் எழுநூற்றுப் பதினாறு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு ரூபாய் நாற்பத்து நான்கு சதம்) மீது ஆண்டுக்கு மூன்று (3.00%) வீதத்தில் 2023.09.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் மேலும் இறுதி நன்மைகள் 4,690,025.34 (நான்கு மில்லியன் அறுநூற்று தொண்ணூறு ஆயிரத்து இருபத்து ஐந்து ரூபாய் முப்பத்து நான்கு சதமும்) வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.06.07 திகதியிட்ட ஈட்டு முறி இல.390,391,392 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஆர்.வீ.அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2022.01.19 திகதியிட்ட ஈட்டு முறி இல.4825, ஆகியவற்றின் பேரில் மீள் அட்டவணைக் கடன் A மீது 2023.09.09 வரை முதலும் வட்டியும் ரூ.29,695,699.38 (இருபத்தொன்பது மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றைந்து ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்றொன்பது ரூபாய் முப்பத்தெட்டு சதம்) மீள் அட்டவணைக் கடன் B மீது, ரூ.5,969,495.03(ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ஆயிரத்து நானூற்று தொண்ணூற்றைந்து ரூபாய் மூன்று சதம்) மேலும் இறுதி நன்மைகள் 4,690,025.34 (நான்கு மில்லியன் அறுநூற்று தொண்ணூறு ஆயிரத்து இருபத்து ஐந்து ரூபாய் முப்பத்து நான்கு சதமும்) அத்துடன் 2023.09.10 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50.`.3. விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஓக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நாவலப்பிட்டிக் கிளை முகாமையாளருக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பட்ட அட்டவணை.**

உரித்துரிமைச் சான்றிதழ் இல.00362543902.

**1. காணியின் விபரங்கள்.**

| | |
|---|---|
| (எ) மாவட்டம் | : கண்டி |
| (பி) பிரதேச செயலாளர் பிரிவு | : உடுநுவர |
| (சி) கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 56,கடகும்புர |
| (டி) கிராமம் அல்லது நகரம்: | : படுபிட்டிய |
| (ஈ) வரிமதிப்பு இல: | : ஒன்றுமில்லை |
| (எப்) கடெஸ்ரல் பட. இல. | : 320255 |
| (ஜீ) புலொக் இல. | : 03 |
| (எச்) காணித்துண்டு இல. | : 55 |
| (ஐ) விஸ்தீரணம் | : ஹெக்டெயார் 0.1168 |
| (ஜே) ஈட்டின் படி காணியின் விஸ்தீரணம் | : ஹெக்டெயார்கள் 0.1168 |

**2. முற்பதிவு தொடர்பு**

| | |
|---|---|
| (ஏ) பதிவு இடம் | : கண்டி |
| (பி) பிரிவு | : |
| (சீ) தொகுதி | : 00362512160, 00362541608, 0362517922 |
| (டி) பக்கம் இல. | : |
| (ஈ) உரித்துரிமைச் சான்றிதழ் இல. | : 003262543902 |
| (எப்) உரித்துரிமை வகுப்பு | : முதலாவது |

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**இலங்கை வங்கி,**
**நாவலப்பிட்டி**
**டீ.எம்.பீ.திசாநாயக்க**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 டிசம்பர் 19 செவ்வாய்க்கிழமை

# இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினருடன் அமைச்சர் ஹரீன் சந்தித்துப் பேச்சுவார்த்தை

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் மற்றும் இலங்கை கிரிக்கெட் ஆலோசகர் சனத் ஜயசூரிய ஆகியோரை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நேற்று (18) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட கிரிக்கெட் தேர்வுக் குழுவின் நவீன மற்றும் மூலோபாய திட்டங்கள் அடிப்படையில் இந்நாட்டு கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் முக்கிய இடத்திற்கு கொண்டுவர முடியும் என்று இந்த சந்திப்புக்குப் பின்னர் விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ வெளியிட்ட ட்விட்டர் பதிவில், “இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினேன். புதிய தேர்வுக் குழுவில் நவீன மற்றும் மூலோபாய திட்டங்கள் அடிப்படையில் இந்நாட்டு கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் புரட்சியுடன் வெற்றிகரமான இடத்திற்கு தூக்கி நிறுத்தும் திறன் அவர்களுக்கு உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கை கிரிக்கெட் உயர் செயல்திறன் நிலையத்தின் தலைவர் சனத் ஜயசூரிய மற்றும் புதிய கிரிக்கெட் தேர்வுக் குழு அங்கத்தவர்கள் இதில் பங்கேற்றனர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க தலைமையிலான புதிய



தேர்வுக் குழுவில் முன்னாள் வீரர்களான அஜந்த மெண்டிஸ், இந்திக்க டி சேரம், தரங்க பரணவிதான மற்றும் தில்ருவன் பெரேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜனசூரிய இலங்கை கிரிக்கெட் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய கிரிக்கெட் கட்டமைப்பு தொடர்பில் மதிப்பாய்வு செய்து அதனை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த திட்டமொன்றை வகுக்கவும், இளையோர் முதல் தேசிய மட்டம் வரை நேர்த்தியான கட்டமைப்பையும், அபிவிருத்தியையும் மேற்கொள்ளும் முகமாக சனத் ஜயசூரியவுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அண்மையில் நடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி சோபிக்கத் தவறியதை அடுத்தே இந்த அதிரடி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு நேற்று முதல் முறை கூடியது. எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை வரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான தலா மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடர்களுக்கான அணிகளை தேர்வு செய்வதே புதிய தேர்வுக் குழுவின் முதல் பொறுப்பாக அமைந்துள்ளது. இதற்கான அணித் தேர்வு குறித்து நேற்றுக் கூடிய தேர்வுக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக மூன்று வகை கிரிக்கெட்டுக்கும் மூன்று அணித் தலைவர்களை நியமிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் சூழலிலேயே தேர்வுக் குழுவினர் முதல் முறை கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காசா–இஸ்ரேல் பாதை திறப்பு



போர் ஆரம்பித்த பின்னர் ஐக்கிய நாடுகள் உதவி வாகனங்கள் முதன்முறையாக இஸ்ரேலில் இருந்து நேரடியாகக் காசாவுக்குள் செல்கின்றன.

காசா பிராந்தியத்திற்கு மருந்துகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை ஒரு மடங்கு அதிகமாக வழங்குவதே இலக்கு என்று இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கெரெம் ஷாலோம் சோதனைச் சாவடி வழியாக மொத்தம் 79 வாகனங்கள் காசாவிற்கு உதவிப் பொருட்களை வழங்கின. பல வாரங்களாக, எகிப்து வழி உதவிப் பொருட்கள் காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டன.

சோதனை நடவடிக்கைகள், ஏற்பாட்டு சிக்கல்கள் உதவிப் பொருட்கள் சென்று சேர்வதை மெதுவடையச் செய்ததாய் எகிப்திய அதிகாரிகள் கூறினர். இதேவேளை காசா மக்களை பட்டினியால் அழிக்க இஸ்ரேல் முயற்சி செய்வதாக அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. காசாவுக்கு எந்த மனிநேய உதவிகளும் போதுமான அளவு அனுமதிக்கப்படவில்லை என்று அது குற்றம்சாட்டியது.

## பயங்கரவாத ஒழிப்பு: பாக். தேசிய திட்டம்



பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை பாகிஸ்தான் பாதுகாப்பு தரப்பினர் தயாரித்துள்ளனர். பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் இடம்பெற்றுள்ள மூன்று வெவ்வேறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து இத்தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாகாண பொலிஸ் அதிகாரியின் தகவலின் படி, இவ்வருடம் ஜுன் 18 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதியில் 665 பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தாக்குதல்களால் பாதுகாப்பு படையினரும் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர். இந்நிலையில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கான வேலைத்திட்டத்தை பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் தயாரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட கொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை



வட கொரியா நேற்று (18) இரண்டாவது நாளாகப் புவியீர்ப்பு ஏவுகணையைப் பாய்ச்சியுள்ளது.

இது, இந்த ஆண்டு வட கொரியா பாய்ச்சியுள்ள ஐந்தாவது கண்டம்விட்டுக் கண்டம் பாயக்கூடிய புவியீர்ப்பு ஏவுகணையாக உள்ளது. இவ்வாறு பாய்ச்சப்பட்ட ஏவுகணை 15,000 கீலோமீற்றரைத் தாண்டிச் செல்லக்கூடியது என்று ஜப்பான் கூறியது.

அது அமெரிக்காவின் எந்தப் பகுதியையும் எட்டக்கூடிய ஆற்றல் கொண்டது.

வட கொரியா நடத்திய புவியீர்ப்பு ஏவுகணைச் சோதனைகளுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்தது. வட கொரியா சினமூட்டும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தென் கொரியா கூறியது.

கடந்த ஞாயிறன்று (17) வட கொரியா குறுந்தொலைவுப் புவியீர்ப்பு ஏவுகணையைப் பாய்ச்சியது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் மருத்துவமனைகள், குடியிருப்புகள் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்: நூற்றுக்கு மேல் பலி

## போர் நிறுத்தத்திற்கு சர்வதேச அழுத்தம் அதிகரிப்பு

காசாவில் பொரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டு மருத்துவமனைகள் சேதமாக்கப்பட்டிருக்கும் நிலையில் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது.

மற்றோரு அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானம் ஒன்றின் மீது அமெரிக்க நேரப்படி நேற்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது. பிரிட்டன் மற்றும் ஜெர்மனியை அடுத்து நீடித்த போர் நிறுத்தம் ஒன்றுக்கு பிரான்ஸும் அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு காசாவில் உள்ள ஜபலியா அகதி முகாம் மீது இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை (17) நடத்திய தாக்குதலில் 90 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு நூறுக்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஷெஹாப் குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அந்த வீட்டுக்கு அருகில் இருக்கும் கட்டடங்களைச் சேர்ந்த பலரும் காயமடைந்ததாக அல் அக்ஸா வானொலி குறிப்பிட்டுள்ளது.

“உயிரிழந்த பலர் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று நாம் நம்புகிறோம். இஸ்ரேலிய தாக்குதல்கள் தீவிரமாக இருப்பதால் இடிபாடுகளை அகற்றி உடல்களை மீட்க முடியாதுள்ளது” என்று மருத்துவர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு பலர் காயமடைந்திருப்பதோடு, தொற்கில் ரபா பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலமான நில அதிர்வுடன் வெடிப்புச் சத்தம் கேட்ட பகுதியை நோக்கி மக்கள் இடிபாடுகளில் சிக்கிவர்களை மீட்பதற்காக ஓட்டம்பிடித்தனர் என்று தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்கு அருகில் வசிக்கும் மஹ்மூத் ஜர்பு ரோய்ட்டர்ஸுக்கு கூறினார்.

போராளிகளை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்துவதாகவும் பொது மக்கள் தாக்கப்படுவதை தவிர்ப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் இஸ்ரேல் அரசு கூறுகிறது.

### இலக்காகும் மருத்துவமனைகள்

எனினும் கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனைக்குள் இருக்கும் மகப்பேற்றுப் பிரிவு கட்டடத்தின் மீது இஸ்ரேலிய டாங்கி ஒன்று ஷெல் குண்டுகளை வீசியது. இதில் தினா அபூ மஹ்சன் என்ற 13 வயது சிறுமி கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் கித்ரா தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன் கான் யூனிஸின் அல் அமல் பகுதியின் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஷெல் வீச்சில் அபூ மஹ்சன் ஏற்கனவே தனது தந்தை மற்றும் இரு சகோதரர்களையும் தனது ஒரு காலையும் இழந்திருந்ததாக அல் கித்ரா குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய தாக்குதல்களால் காசாவில் உள்ள மூன்றில் ஒன்றுக்கும் குறைவான மருத்துவமனைகளே தற்போது பகுதி அளவில் இயங்கி வருவதாக ஐ.நா தெரிவித்துள்ளது. வடக்கு காசாவில் உள்ள இரு மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் இராணுவம் ஞாயிறன்று மேற்கொண்ட நடவடிக்கைக்கு உலக சுகாதார அமைப்பு கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் கடந்த பல நாட்களாக நடத்திய இராணுவ



நடவடிக்கையில் கமால் அத்வான் மருத்துவமனையில் ஏற்பட்டிருக்கும் பெரும் அழிவுகளை கண்டு உலக சுகாதார அமைப்பு திகைப்படைந்துள்ளது என்று அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையின் முற்ற வெளிப் பகுதியில் டாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் நிலைகொண்டிருப்பதோடு, மருத்துவமனைக்குள் தனது மகளை பார்க்க வந்த அபூ முஹமது அழுதபடி காணப்பட்டார்.

“அவனை எப்படிக் கண்டு பிடிப்பது என்று எனக்குத் தெரியவில்லை” என்று இடிபாடுகளை காண்பித்தபடி குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய குண்டுவீச்சுகளால் அல் சிபா மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு இரத்த வெள்ளமாக மாறியிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தென் காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனை மீது இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு ஏழு பேர் காயமடைந்ததாக அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பல நாட்களாக முற்றுகையில் வைத்து குண்டு வீசி வந்த வடக்கு காசாவில் உள்ள அவ்தா மருத்துவமனைக்குள் கடந்த ஞாயிறன்று ஊடுருவிய இஸ்ரேலிய இராணுவம் மருத்துவப் பணியாளர்கள் பலரை கைது செய்ததாக அந்த அமைச்சு கூறியது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் 1,200 பேர் வரை கொல்லப்பட்டு 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வெடித்த போரில் காசா மீது இஸ்ரேல் இரண்டு மாதங்களுக்கு மேலாக இடைவிடாது தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 19,000ஐ தொட்டுள்ளது.

முடிவு வரை போரிடப்போவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஞாயிறன்று கூறியதோடு, ஹமாஸை ஒழித்து, பணயக் கைதிகளை விடுவிப்பதாக உறுதி அளித்த அவர், காசா தொடர்ந்து பயங்கரவாதத்தின் மையமாக இருக்காது என்றார். இஸ்ரேலின் எரஸ் எல்லைக் கடவைக்கு அருகில் காசாவின் வடக்கு எல்லையில், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதில் மிகப்பெரிய ஹமாஸ் சுரங்கப்பாதை ஒன்றை கண்டுபிடித்ததாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சுரங்கப்பாதை சிறு வாகனங்களை பயன்படுத்தப் போதுமான அளவு பெரிதாக உள்ளது என்று அதனைப் பார்த்த ஏ.எப்.பி செய்தி நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் ஒருவர் விபரித்துள்ளார்.

இந்த சுரங்கப்பாதையை அமைப்பதற்கு பல மில்லியன் டொலர்கள் செலவாகி இருக்கும் என்றும், ரயில்கள், மின்சாரம், வடிகால் மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பைக் கொண்ட இதனை உருவாக்க பல ஆண்டுகள் எடுத்திருக்கும் என்றும் அது கூறியது.

எனினும் காசாவில் பலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகிறது. போர் நடவடிக்கைகளில் மேலும் நான்கு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்ட நிலையில் காசா மீது தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்டிருக்கும் இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 126 ஆக உயர்ந்துள்ளது.

### போர் நிறுத்த அழைப்பு

போரை நிறுத்துவதற்கும் பொது



மக்களை பாதுகாப்பதற்கும் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த போரினால் காசா மக்கள் தொகையில் சுமார் 90 வீதத்தை நெருங்கும் அளவுக்கும் 1.9 மில்லியன் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசா மக்கள் தொடர்ச்சியாக தொடர்பாடல் துண்டிப்பை சந்தித்து வருகின்றனர். எனினும் அங்கு தொலைபேசி மற்றும் இணையதள சேவைகள் படிப்படியாக வழமைக்கு திரும்பியதாக காசாவின் பிரதான தொலைத்தொடர்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் சென்ற பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் கத்தரின் கொலன்னா “அவசர மற்றும் நீடித்த” போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். இஸ்ரேலிய தாக்குதலில் காசாவில் உள்ள தமது வெளியுறவு அமைச்சு அதிகாரிகளில் ஒருவர் கொல்லப்பட்டதற்கு பிரான்ஸ் கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

முன்னதாக 80 இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டு இடம்பெற்ற ஏழு நாள் போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் வகித்த கட்டார், “மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக” தெரிவித்துள்ளது.

இந்நிலையில் போர் நிறுத்தத்தை புதுப்பித்து பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாகவும் அதனை செயற்படுத்துவதில் முரண்பாடு நீடிப்பதாகவும் எகிப்தின் இரு பாதுகாப்பு தரப்பினரை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவுத் தலைவர் மற்றும் கட்டார் பிரதமருக்கு இடையே கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது உறுதியான நிலையில் போர் நிறுத்தம் பற்றிய எதிர்பார்க்கு அதிகரித்துள்ளது.

விடுவிக்க முடியுமான பணயக்கைதிகளின் ஒருதலைப்பட்சமான பட்டியல் ஒன்றை ஹமாஸ் அமைப்பு தயாரித்திருப்பதாகவும், இஸ்ரேலிய படை போருக்கு முன்னரான எல்லைக்கு வாபஸ் பெற வேண்டும் என நிபந்தனை விதித்திருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. இதில் ஹமாஸ் தயாரித்த பட்டியலுக்கு இஸ்ரேல் இணங்கி இருந்தபோதும் போர் நிறுத்தத்திற்கான நேரம் மற்றும் காலம் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர் அந்தப் பட்டியலை பார்ப்பதற்கு அது கோரி இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் படைகளை வாபஸ் பெறும் நிபந்தனையை இஸ்ரேல் மருத்திருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

எகிப்தின் அறிவிப்புக் குறித்து பதிலளித்த ஹமாஸ் அதிகாரி சமி சுஹ்ரி, “இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவரும் எந்த ஒரு முற்சியையும் நாம் வரவேற்கிறோம். எந்த ஒரு பேச்சுவார்த்தைக்கும் அடித்தளமாக இது இருக்கும்” என்று குறிப்பிட்டார்.

காசா போர் மேற்குக் கரையிலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. மேற்குக் கரை நகரான தூபாஸில் இஸ்ரேல் இராணுவம் நேற்று நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல்களில் இரு சிறுவர்கள் உட்பட நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நால்வரும் துப்பாக்கிச் சூட்டு காயத்திற்கு இலக்காகி இருப்பதாகவும் மூவரின் தலையில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசாவில் போர் வெடித்த கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் மேற்குக் கரையில் 72 சிறுவர்கள் உட்பட 300க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போர் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் சிரிய தலைநகர் டமஸ்கஸுக்கு அருகில் இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதல்களில் இரு இஸ்ரேலிய வீரர்கள் காயமடைந்ததாக சிரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

லெபனானுடனான இஸ்ரேலின் வடக்கு எல்லையில் ஹஸ்புல்லா போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கு இடையே அடிக்கடி மோதல் நீடித்து வருவதோடு பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.